Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 21 ஞாயிற்றுக்கிழமை (04.05.2014) பக்கங்கள் 20 ஓசை – 214

## இலவச குடிநீர் விநியோகம் தீவகப்பகுதியில் ஆரம்பம்

(வேலணை)

தீவகம் தெற்கு வேலணைப் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள புங்குடுதீவு, நயினாதீவு, வேலணைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, சரவணை ஆகிய இடங்களில் உள்ள மக்களுக்கு வேலணைப் பிரதேச செயலகத்தினால் இலவச குடிதண்ணீர் கடந்த வாரத்தில் இருந்து விநியோகிக்கப்பட்டுவருகின்றது.

புங்குடுதீவு வேலணை சரவணை பகுதிகளில் கடும் வறட்சியால் மக்கள் குடிதண்ணீர் இன்றி பல தரப்பட்ட கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.எனவே இவர்களினது குடிதண்ணீர் வழங்கலுக்கான வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு வேலணைப் பிரதேச செயுலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் யாழ்.அரசாங்க அதிபரைக் கேட்டிருந்தார்.

அவரது கோரிக்கையினை நிறைவேற்றிவைக்கும் வகையில் யாழ் அரச அதிபர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின்

19 ஆம் பக்கம் பார்க்க

## தாதியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு; வைத்திய சேவைகள் ஸ்தம்பிதம்

அரச தாதி உத்தியோகத்தர்கள் நேற்றைய தினம் நாடளாவிய ரீதியில் ஆரம்பித்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நாட்டின் அநேகமான வைத்தியசாலைகள் சிலவற்றின் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

பிரசவ பயிற்சியினை வழங்குமாறு கோரியே இவர்கள் பணிப்பகிஷ்கரிப்பினை ஆரம்பித்துள்ளனர்.

இந்தப்பிரச்சினை தொடர்பாக சுகாதார அமைச்சருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பு தோல்வியில் முடிவுற்றதனைத்தொடர்ந்தே நேற்று பணிப்பகிஷ்கரிப்பை தாதிய உத்தியோகத்தர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக யாழ்பாணம், இரத்தினபுரி, கராப்பிட்டி, தங்காலை, பொலன்னறுவை, அநுராதபுரம்,

மாத்தறை, கலேன்பிந்துனுவெவ, மாத்தளை, களுத்துறை, காலி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் ஸ்தம்பித நிலைமை ஏற்புட்டுள்ளது.

குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்களுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தாதி உத்தியோகத்தர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளிட்ட பல வைத்தியசாலைகளில் பணிப்பகிஷ்கரிப்பினை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்பாணம்,இரத்தினபுரி,கராப்பிட்டி,தங்காலை எல்பிட்டி மற்றும் கம்பளை ஆகிய பகுதி வைத்தியசாலைகளிலும் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்கின்றது. குருநாகல் போதனா

19 ஆம் பக்கம் பார்க்க



# இலங்கை குறித்த நிலைப்பாடு அமெரிக்காவிடம் மனமாற்றம்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை குறித்த நல்லிணக்கம், மீள்குடியேற்றம் மற்றும் மீள் கட்டுமானம்தொடர்பான விடயங்களில் அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைதியான ஒன்றுபட்ட வளம்மிக்க இலங்கையை எதிர்பார்க்கும் எமது நீண்ட கால ஆவலின் காரணமாக இலங்கையில் நாம் தொடர்ந்து நல்லிணக்க முயற்சிகளுக்கும் மனித உரிமைகள் பாதுகாப்பிற்கும் ஆதரவளித்து வருகின்றோமென அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஞா பிஸ்வால் தெரிவித்த கருத்து தொடர்பாகவே அமைச்சர் ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் ரம்புக்வெல மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக அமெரிக்கா தற்போது உணரத் தலைப்பட்டுள்ளது. அமெரிக்க ராஜாங்கத்திணைக்களத்தின் உதவிச் செயலரின் பேச்சானது, இலங்கையுடனான விடயத்தில் அமெரிக்கா மென்மையான போக்கை கடைப்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை- இந்திய மீனவர்களின் இரண்டாம் கட்டப் பேச்சு, 12இல்

இலங்கை - இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கிடையிலான இரண்டாம்கட்டப் பேச்சு எதிர்வரும் 12ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து இரு நாட்டு அமைச்சர்களுக்கும் இடையில் முக்கிய பேச்சு நடத்த தமது அமைச்சு திட்டமிட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத துறை அமைச்சின் பேச்சாளர் நரேந்திர ராஜாபக்ஷ தெரிவித்துள்ளார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இருநாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பில் எதிர்வரும் 12 ஆம் திகதி இரண்டாம் கட்ட பேச்சு நடைபெறவுள்ளது. இந்தப் பேச்சுக்குப் பின்னர் இரு நாட்டு அமைசசுக்களிடையே 3 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு மீனவர் பிரச்சினை தொடர்பில் ஆராயத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த விசேட குழு

19 ஆம் பக்கம் பார்க்க

## மத அடிப்படைவாதம் தீவிரம்; பாப்பரசர் பிரான்சிஸ் கவலை



(கொழும்பு)

இலங்கையில் மத அடிப்படைவாதம் தீவிரம் பெறுவது குறித்து பாப்பரசர் பிரான்சிஸ் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் இலங்கையைச்சேர்ந்த ஆயர்களை பாப்பரசர் நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையில், வத்திக்கான் சென்ற ஆயர்கள் குழு நேற்றுக் காலை வத்திக்கானில், பாப்பரசர் பிரான்சிசை சந்தித்தது.

பாப்பரசர் பிரான்சிஸ் பதவியேற்ற பின்னர், இலங்கை ஆயரகளைச் சந்திப்பது இதுவே முதல்முறையாகும்.

இலங்கையில் தனியொரு மதத்தின் அடையாளத்தை வைத்து தவறான முறையில், தேசிய ஒற்றுமை உணர்வு ஊக்குவிக்கப்படு

19 ஆம் பக்கம் பார்க்க

## கடனட்டை மோசடி 3 தமிழர்கள் கைது



வெளிநாடுகளில் வதியும் மூன்று இலங்கைத். தமிழர்கள் உள்ளிட்ட 5 வெளிநாட்டவர்கள் போலி கடனட்டை மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தாய்லாந்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். கரோன் பிரதேசத்தில் ஏரிஎம் நிலையம் ஒன்றில் பணம் எடுக்க முயன்ற போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து ஒரு தொகுதி போலிக் கடனட்டைகளும், 7 இலட்சம்

19 ஆம் பக்கம் பார்க்க

## மூன்றாம் சக்தியொன்றின் ஊடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வு சாத்தியம்



## கூறுகிறார் வரதராஜப்பெருமாள்

(கொழும்பு)

ஜனநாயக ரீதியில் தமிழ் மக்களுக்கான காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை மூன்றாம் சக்தியொன்றின் ஊடாகவே முன்வைக்கமுடியுமென வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரசாங்க ஆதரவு தமிழ்க் கட்சிகளைத் தாண்டிய புதிய தமிழ் அரசியல் சக்தியொன்று உருவாக்கப்பட வேண்டும்.

மூன்றாம் சக்தியொன்றின் ஊடாகவே ஜனநாயக ரீதியில் தமிழ் மக்களுக்கு காத்திரமான

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆயுதங்கள் மீட்பு

ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதியில் ஆள்களற்ற வீடொன்றில் இருந்து நேற்று மதியம், ஒரு தொகுதி ஆயுதங்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன. இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலை அடுத்து அந்த வீட்டில் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது அங்கிருந்து ஒரு ஏ.கே.47 துப்பாக்கி,ஒரு மகஸின்,15 தோட்டாக்கள் என்பனவற்றை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

## இலங்கையில் பாலினவன்முறை சமூக கட்டமைப்பிற்கு அச்சுறுத்தல்

(வோஷிங்டன்)

## அமெரிக்கா தெரிவிப்பு

இலங்கையில் போர் இடம் பெற்ற பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த பெருமளவான மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளத்திரும்பியுள்ள போதிலும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் இலங்கையின் சமூகக் கட்டமைப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.


அனைத்துலக அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பின் ஆசியப் பிரிவின்

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்

# தனியார் பேருந்து உரிமையாளர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை வடபிராந்திய தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

மேற்படி சந்திப்பு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பணிமனையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, வவுனியாவிலிருந்து புறப்படும் குறிப்பிட்ட சில தனியார் பேருந்துகள் மாங்குளம் கிளிநொச்சி பரந்தன் சந்தியூடாக முல்லைத்தீவு நகரைச் சென்றடைவதாகவும் இதனால் கிளிநொச்சியிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் பரந்தன் சந்தியூடாக முல்லைத்தீவு நகரைச் சென்றடையும் பேருந்து உரிமையாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாக அமைச்சரிடம் இதன்போது எடுத்து விளக்கப்பட்டது.

இதனிடையே மன்னாரிலிருந்து புறப்படும் சில தனியார் பேருந்துகள் வெள்ளாங்குளம், முழங்காவில், பூநகரி, பரந்தன் சந்தியூடாக முல்லைத்தீவு நகரைச் சென்றடைவதாகவும் இதன் காரணமாகவும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சிலர் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

இது தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர், துறை சார்ந்த அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இதன்போது, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலெஸ்ரின் (உதயன்), ஈ.பி.டி.பி. யின் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## உரும்பிராயில் மகா யாகம்

உரும்பிராய் செல்வபுரம் சிவ் பூரீஸ்வரர் சிவன் ஆலயத்தில் இன்று மகா யாகம் இடம்பெறவுள்ளது. மழை பெய்து பூமி செழிக்க வேண்டும் என்றும் விபத்துக்களில் இருந்தும் கலாசாரப் பிறழ்வுகளில் இருந்தும் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் வேண்டியே இந்த யாகம் இடம்பெறவுள்ளது.

சைவ மகா சபையின் ஏற்பாட்டில் காலை 9.00 மணி முதல் இடம்பெறவுள்ள இந்த யாகத்தை அண்மையில் தமிழ் அர்ச்சகர் பயிற்சியை முடித்து வெளியேறிய தனியொளிசிவம் பிரசாத் ஐயா தலைமையிலான செந்தமிழ் அர்ச்சகர்கள் நடத்தவுள்ளனர்.

இதில் பிரதேச மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு இறையருள் வேண்டிப் பிரார்த்திக்குமாறு சைவ மகா சபை கோரியுள்ளது. சிவத்தொண்டர்கள், சிவ மங்கையர்களாக இணைந்து கொள்ள விரும்புபவர்களும் இங்கு வருகை தந்து இணைந்துகொள்ள முடியுமென்றும் சைவ மகா சபை மேலும் தெரிவித்துள்ளது.

# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் வடக்குப் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவரது சடலம் அச்சுவேலி பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் பிரதீபன் (வயது - 42) என்ற குடும்பஸ்தரின் சடலமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை அடுத்து நேற்றுப் பிற்பகல் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (பா)

# ஐயனார் ஆலய அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் அருள் மிகு பூர்ணா புஷ்கலா சமேத ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் அலங்கார உற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும் திருக்கல்யாண வைபவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

தினமும் நவகும்ப அபிஷேகம், விசேட பூசை, வசந்த மண்டபப் பூசை என்பன இடம்பெற்று சுவாமி உள்வீதியுலாவும் இடம்பெறும்.

ஆலய தர்மகர்த்தா சு.சிவானந்தன் ஐயா தலைமையில் இடம்பெறும் அலங்கார உற்சவத்தினை சிவஸ்ரீ கு.கிருஷ்ணமூர்த்தி குருக்கள் நிகழ்த்தி வைப்பதுடன், விழாக்காலங்களில் தினமும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (இ)

# சட்டவிரோத மணல் கடத்தலை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

## யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

சட்டவிரோத மணல் கடத்தலைத் தடுக்க விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாக யாழ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கெற்பேலி, அரியாலை போன்ற பகுதிகளில் தனியாரின் காணிகள், அரச காணிகளில் இவ்வாறான சட்டவிரோத மணல் கடத்தல்கள் இடம்பெற்று பலர் உழவு இயந்திரங்களுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையிலும் அவ்வாறான மணல் கடத்தல் தற்போதும் இடம்பெறுகின்றது.

அண்மையில் கெற்பேலியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டே உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளது. இப்பகுதிகளுக்கு பொலிஸார் சென்றால் திருட்டுத்தனமாக மணல் கடத்துவோருக்கு தகவல் சென்று விடுகின்றது. கைத்தொலைபேசிகள் மூலம் தகவல் வழங்கி பலரும் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். இதனால் அவர்கள் இலகுவில் தலைமறைவாகக் கூடிய நிலை இருக்கிறது.

சரியான தகவல் எமக்கு வழங்க பொதுமக்களும் முன்வருவது மிகக்குறைவு. எனவே இந்த சட்டவிரோத நடவடிக்கையைக் கட்டுப்படுத்த நாம் விசேட நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம்.

விரைவில் இதற்கென நடவடிக்கை மேற்கொள்வோம் என வாராந்த செய்தியாளர் சந்திப்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (இ)

# மீண்டும் தலைதூக்கும் ஆட்டுத் திருட்டுக்கள்

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு, மட்டுவில் மத்தி, சந்திரபுரம் போன்ற பகுதிகளில் மீண்டும் ஆட்டுத் திருட்டுச் சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன.

கடந்த சில மாதங்களாக இப்பகுதிகளில் இவ்வாறான ஆட்டுத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறாத நிலையில் ஓரளவுக்கு நிம்மதியாக இப்பகுதி மக்கள் தமது ஆடுகளை ஆட்களற்ற வெற்றுக் காணிகளில் மேய்ச்சலுக்காக கட்டி வந்த நிலையில் நேற்றும் நேற்றுமுன்தினமும் 3 ஆடுகள் கட்டியிருந்த கயிறுகள் அறுக்கப்பட்டு திருடப்பட்டுள்ளன.

தற்போது ஆட்களற்ற காணிகளில் தமது ஆடுகளை மேய்ச்சலுக்காக கட்டுவதைத் தவிர்த்து வருவதாகவும், வீடுகளிலேயே ஆடுகளை கட்டி வளர்க்க வேண்டிய நிலை மீண்டும் ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (இ)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 252 |
| திகதி - | 2014.05.02 |
| வர்ணம் - | நீலம் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

02 36 39 64 W

வெல்லப்படவில்லை

பரிசுத் தொகை ரூபா.

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 11 | 550,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 199 | 199,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 380 | 380,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9112 | 546,720/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4834 | 193,360/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 120374 | 2,407,480/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17386 | 347,720/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 17,911,020/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,624,280/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 18,146,460/-

2014.05.06ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3673)



## சிறுவிளம்பரங்கள்

### வேலைவாய்ப்பு

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000.00 - 38,000.00 வரை வருகைதரும் தினமே சேர்த்துக்கொள்ளப்படும். (உற்பத்தி பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும் குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். 071 085 4068.

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000.00 - 35,000.00 வரை. தங்குமிடம். உணவு, பயிற்சி வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். 077 596 4299
(R/348)

### காணி, வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் சகல வசதிகளுடனுள்ள ஒரு வீடும், அதை அடுத்துள்ள இரண்டு சிறு வீடுகளாக்கக்கூடிய கட்டடத் தொகுதியும் விற்பனைக்குண்டு. வாங்குவோரின் வசதிக்கேற்ப சிறு சிறு பகுதிகளாகவும் விற்க முடியும். தொடர்பு : காலை, மாலையில் - க.சீவறட்ணம், சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (ஏகாம்பரம் கடையடி)
(R/347)

### டயானா பிளாஸ்ரிக்
*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3595)

### காணி விற்பனைக்கு

பலாலி வீதி, வசாவிளான் மகா வித்தியாலயத்திற்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு : 0771107232
(C/3675)

# ஆரம்ப சுகாதார நிலையம் முழுமையாக கட்டப்பட வேண்டும்


## கிளாலி மக்கள் கோரிக்கை

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி மூலம் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சுகாதார நிலையம் கடந்த 13 வருடங்கள் கடந்த நிலையிலும் முழுமையாகக் கட்டிமுடிக்கப் படாமல் அரைகுறையாக காட்சியளிப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளாலி மக்களுக்கான மருத்துவ சேவையைக் கருத்தில் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கட்டடம் தொடர்பாக கவலையடைந்த மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இதனை வெகுவிரைவாக கட்டிமுடித்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்த சூழ்நிலை காரணமாக பல இலட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி கட்டடம் கட்டி முடிக்கப் படாமல் அரைகுறையுடன் கைவிடப்பட்டது. இந்த வேலைத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியும்வேறு அபிவிருத்தி வேலைக்கு மாற்றப்பட்டது.

இந்த நிலையில் 250 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தற்போது மீள்குடியமர்த்தப்பட்டுள்ளது. இவர்கள் இலகுவான மருத்துவ வசதிகளைப் பெறுவதற்கு வசதியாக அரைகுறையுடன் காட்சியளிக்கும் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தை முழுமையாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



ஞானவீர சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு விழாவில் சனசமூக நிலையம் ஊடாக இரு கால்களையும் இழந்த சதாசிவம் மயூரன் என்பவருக்கு சக்கரநாற்காலி வழங்கப்பட்டது. இதனை பா.உ.மாவை சேனாதிராஜா வழங்கி வைத்தார். (48)

# மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

துன்னாலை வடக்கு ஆயில் நின்றொல்லை வல்லியானந்தப் பிள்ளையார் கோவில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நாளை காலை 9.05 மணி முதல் 10.36 மணி வரை நடைபெறவுள்ளது.

இன்று காலை 8 மணிமுதல் பி.ப. 4 மணிவரை பக்தர்கள் எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

வேதாகம பூஷணம், கிரியாகிரம ஜோதி பிரம்மஸ்ரீ ராம் கெங்காதரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடாத்தவுள்ளார்.

◆ ◆ ◆

(யாழ்ப்பாணம்)

புலோலி பல்லப்பை ஸ்ரீ நரசிங்க வைரவர் கோவில் மகாகும்பாபிஷேகம் இன்று காலை 8.13 மணிமுதல் 10.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்தக் கும்பாபிஷேகத்தை சிவாச்சாரிய ஞானபானு சிவஸ்ரீ வே.தியானந்தராசா குருக்கள் நடாத்திவைப்பார்.

# கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

2014 ஆம் ஆண்டிற்கான கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


கலாசார அமைச்சின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும் கலாபூஷண விருதுக்கு தமிழ், முஸ்லிம் கலைஞர்களை தெரிவு செய்யும் பொறுப்பு இந்து சமய கலாசார திணைக்களத்திற்கும் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திற்கும் அளிக்கப்பட்டுள்ளன.

கலைத்துறையில் சிறந்த சேவையாற்றும் கலைஞர்களுக்காக அரசினால் வழங்கப்படும் அரச உயர் விருது கலாபூஷணம் வருடா வருடம் வழங்கப்பட்டு வருகின்றன.

கலை, இலக்கிய, நாடகம், சினிமா, நாட்டுக்கூத்து, சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாட்டுப்புறவியல் ஊடகத்துறையை சேர்ந்தவர்கள் அறுபது வயதைத் தாண்டியவர்கள் எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் பத்திரங்களை அந்தந்த பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து தேவைப்படும் ஆவணங்களுடன் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் கையளிக்க வேண்டும். உரிய விண்ணப்பப்பத்திரம் பிரதேச செயலரின் சிபாரிசுடன் இந்து சமய கலாசார திணைக்களத்திற்கும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் அனுப்பப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# எங்கையிருந்து வருது. இது என்ன குணம் எண்டு விளங்குதில்ல...




'கத்தியைத் தீட்டாதே... கொஞ்சம் உன் புத்தியைத் தீட்டு' எண்டொரு பாட்டைக் கேட்டிருக்கிறம்.

**புத்தியைத் தீட்டுவதற்குப் பதிலாக கத்தியைத் தீட்டினால் என்ன நடக்கும் எண்டு எல்லாருக்கும் தெரியும்.**

**கத்தியைத் தீட்டுவதற்குப் பதிலாக புத்தியைத் தீட்டினால் என்ன நடக்கும் எண்டும் எல்லாருக்கும் விளங்கும்.**

ஆனால், என்ன நாசமறுப்போ தெரியேல்ல, கத்தியைத் தீட்டிற காரியங்கள்ளைத்தானே தமிழர்களாகிய நாங்கள் செய்து கொண்டிருக்கிறம்.

**மறத்தமிழர்கள், மானத்தமிழர்கள், வீரத்தமிழர்கள்** எண்டு எங்கட நெஞ்சுக்குள்ளயும் நினைவுக்குள்ளயும் கிடக்கிற 'சரக்கு' எப்பவும் புத்தியைத் தீட்டிறதுக்குப் பதிலாக கத்தியைத்தான் தீட்டிக்கொண்டிருக்கு.

இப்பிடிக் கத்தியைத் தீட்டிக்கொண்டிருந்தமெண்டால், உலகத்திலயும் ஆரும் எங்களைக் கணக்கில எடுக்க மாட்டினம்.

ஏட்டிக்குப் போட்டியாக அறிக்கை விடுறது, தீர்மானங்களை நிறைவேற்றிறது... கண்டன அறிக்கைகளை வெளியிடுவது... இதையெல்லாம் எத்தனை தடவைதான் செய்து பாத்திட்டம்...

வெறுங்கையோட நிண்ட தமிழர்களைப் பார்த்து ஜே.ஆர் போர் எண்டால் போர். மோத வாறதெண்டால் வாங்கோ எண்டு சவால் விட்டார்...

இதைக் கேட்ட எங்களுக்கும் (தமிழர்களுக்கு) இருப்புக்கொள்ளவில்லை.

**ஜே.ஆர் ஏத்திவிட்ட பப்பாவில ஏறி முப்பது வருசமாக ஆடு ஆடெண்டு ஆடி ஒரு நாள் முறிஞ்சு குப்புற விழுந்தம்...**

**விழுந்து நாரி எலும்பு முறிஞ்சாப் பிறகும் எங்கட கொழுப்பு விடுகுதில்லை.**

திரும்பவும் மகிந்தருக்கும் சிங்கத் தரப்புக்கும் எதிராகக் கத்தியைத்தான் தீட்டிக்கொண்டிருக்கிறம்...

இப்படி நாங்கள் மாறி மாறி ஒவ்வொருதருக்கும் எதிராகக் கத்தியைத் தீட்டத்தீட்ட எங்களை விட்டிட்டே ஒவ்வொருத்தராக விலகிறாங்கள்.

**'இது கத்திகாவிகளின் உலகம் இல்லை. புத்திசாலிகளின் உலகம்'** எண்டு எத்தினை தடவை திருப்பித் திருப்பிச் சொன்னாலும் தமிழர்களுடைய மர மண்டையில ஏறுதேயில்லை.

தங்கட பிள்ளைகள் சண்டை சச்சரவுகளில இறங்காமல் படிச்சு ஆளாக வேணும். நல்ல பிள்ளைகளாக – மென்மையான பிள்ளைகளாக இருக்க வேணும். **கதைச்சால் வெளியால சத்தம் கேட்கப்பிடாது. மிதிச்சால் புல்லுச் சாகக்கூடாது.. எண்டு சிந்திக்கிற எங்கட ஆக்களுக்கு அரசியல் எண்டு வந்திட்டால் மற்றவன்ரை தலையை உடைக்க வேணும். இரத்தம் காணவேணும். பாடம் படிப்பிக்க வேணும் எண்ட வெறித்தனமெல்லாம் எங்கயிருந்தோ வந்திடும்.**

இது என்ன குணம் எண்டு விளங்குதில்ல.

தனிப்பட்ட காரியங்கள் எண்டு வந்திட்டால் அவன்ரை இவன்ரை கையைக் காலைப்பிடிச்சுக் காரியங்களைக் கெட்டித்தனமாகப் பாக்கிற நாங்கள் அரசியல் எண்டு வந்திட்டால்...

சும்மா வீறாப்பும் சண்டித்தனமும் காரசாரமும் விடாப்பிடியும் நெஞ்சை நிமிர்த்திற குணமும் வந்திடுது...

இது ஒரு அங்கிடுதத்திக்குணம் எண்டுதான் சொல்லவேணும்.

தனிப்பட்ட தேவைக்காக எண்டால் ஒரு மாதிரியும் அரசியல் எண்ட பொதுத்தேவை எண்டு வந்தால் மானம், ரோஷம், உரிமை, அது இது எண்டு எல்லாம் தங்களை நிமிர்த்திறதும் சரியானதில்லை.

இது ரண்டக நிலை. இந்த ரண்டக நிலையாலதான் நாங்கள் உலைஞ்சுகொண்டிருக்கிறம்.

இல்லாட்டிக்கு இத்தனை வருசமாக நாங்கள் அரசியல் செய்யிறம். என்னமாதிரிப் பெரிய பெரிய தலைவர்கள் – படிச்ச பெரிய மனிசர் எல்லாம் அரசியலில் ஈடுபட்டும் எங்களால ஒரு சின்ன வெற்றியைக் கூடப் பெற முடியேல்லயே!

அதுக்குப்பிறகு எத்தினை இயக்கங்கள் வந்து போராடின? ஒரு கட்டத்தில இயக்கங்களின்ரை தொகையைக் கேள்விப்பட்டே அரசாங்கத்துக்கு சாப்பாடு, தண்ணி இறங்காமல் இருந்தது.

இயக்கங்களின்ரை தலைவர்கள், தளபதிகள் எண்டால் என்ன சும்மாவா...

ஒவ்வொரு இயக்கத் தலைவர்களுக்குப் பிறகும் ஏராளம் கதைகள்.. ஒவ்வொரு தளபதியைப் பற்றியும் எத்தனையோ புராணங்கள்...

கடைசியில புலிகள் ஆட்லறி அடிச்சு கொழும்பில குண்டு போடுறது வரை எத்தினை கலக்கல்கள்.

ஆனால், என்ன நடந்திது? **கத்தியைத் தீட்டிக் கண்ட மிச்சம் என்ன?**

மற்றவங்கள் புத்தியைத்தீட்டி எங்கோயோ போயிட்டாங்கள்.

வெறுங்கையோட நாங்கள் (தமிழர்கள்) நிக்கேக்க ஜே.ஆர். போர்ப்பிரகடனம் செய்தார் எண்டால், வெறுங்கையோட நிண்டு கொண்டு நாங்கள் இப்ப போர்ப்பிரகடனம் செய்யிறம்..

என்னதான் படிச்சிருக்கிறமோ... என்னதான் செய்து கொண்டிருக்கிறமோ...

பரமேஸ்வரா... விக்னேஸ்வரா... சம்பந்தா... சித்தார்த்தா... பிரேமச்சந்திரா... அடைக்கலநாதா...

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது. - ஜேஷி

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எனக்குப் புரியவில்லை, உங்களுக்குப் புரிகிறதா?

நாம் அதாவது நம் தமிழ்ச் சமூகம் சில குணங்களை விடாமல் பற்றிக் கொண்டிருக்கிறது. அதனால்தான் உலகின் மற்ற மற்ற சமூகங்கள் போல் முன்னேறாமல் முடங்கிக் கிடக்கிறது என்று, அலுவலகம் வந்திருந்த நண்பர் ஒருவர் சலிப்போடு சொன்னார்.

என்ன அந்தக் குணங்கள் என்று கேட்க வாயெடுப்பதற்குள், கண்ணுக்குத் தெரியும் – அறிவால் விளங்கிக்கொள்ளும் உண்மைகளைவிட உணர்ச்சிகரப் பொய்களையே நம் சமூகம் நம்ப விரும்புகிறது என்றார் அவர். சாக்கடைக்குள்ளேயே வைத்திருந்தாலும், அவர்கள் காட்டும் நட்சத்திரங்களுக்காக ஏங்குவதும் ஏமாறுவதும்தான் எமது மக்களுக்குப் பிடித்திருக்கிறது என்று மேலும் சொன்னார் குரலில் விரக்தி தொனிக்க.

பதவிகள், உத்தியோகங்கள், சம்பளங்கள் எல்லாவற்றையும் வாங்கிக் கொள்கிறோம். அவற்றைத் தருகின்ற அரசை, அது எங்களுடையதல்ல– எதிரிநாட்டரசு என்பதாக மனதால் விலக்கி வைத்திருக்கிறோம். எங்கிருந்து தொடங்கியது இது?

எங்களது அரசியலுரிமைகளைத் தர மறுத்ததால் – அடக்குவோம் என்று கொக்கரித்ததால், தமிழ் ஆயுதப்படைகளை உருவாக்கி அவர்கள்மீது தாக்குதல்களை நடத்தினோம். அவர்களும் அதை ஆயுதங்களால் முடிப்பதென்றே கங்கணம்கட்டி நின்றார்கள்.

இதனால் இருபக்கத்திலும் மாறி மாறி சனங்கள் செத்தார்கள். அவர்கள் வலிவுடையரானபோது நமது இழப்புகள் அதிகரித்தது. நமது வீறு மேலெழுந்தபோது அவர்களும் அதிகம் இழந்தார்கள். நமது தரப்பு வெற்றிகளை உற்சாகப்படுத்திக்கொண்டே, அவர்கள் அனைத்து மக்களையும் காக்க வேண்டிய அரசாங்கம், எனவே அவர்களது தாக்குதல்களே அநீதியானவை என்று நாம் நம்பினோம்.

தங்களது பஸ்கள் ரயில்களிலிலும் சந்தைகளிலும் குண்டுகள் வெடித்ததால், தமிழ்ப் பயங்கரவாதம் அநீதியானது என்று அவர்களும் நம்பினார்கள். நம்முடையது விடுதலைப் போராட்டம், அதற்கெதிரான அரசின் நடவடிக்கைகளைத்தான் அரச பயங்கரவாதமாக உலகம் பார்க்க வேண்டும் என்று நம்முடைய எழுத்தாளர்கள் ஆய்வாளர்கள் எழுத...

தமிழ்ப் பயங்கரவாதத்தை ஒடுக்காமல் இந்த நாட்டில் முழு மக்களும் அமைதியாக வாழமுடியாது, நாட்டின் இறைமையைக் காக்கும் விதமாக அரச படைகள் செயற்பட வேண்டும் என்று அவர்களது எழுத்தாளர்கள், ஆய்வாளர்களும் எழுதினார்கள்.

இரு தரப்பிலும் அழிவுகள் ஏற்படுத்துவதை நிறுத்துங்கள், அப்பாவி மக்களை உயிரச்சத்திலிருந்து விடுவியுங்கள், சண்டையை நிறுத்திப் பேசுங்கள், இணக்கமான தீர்வொன்றுக்கு வாருங்கள் என்று இரு தரப்பிலும் உள்ளூரில் உலக அளவில் எல்லாம் பலர் கேட்டுக் கொண்டார்கள்.

விடாக்கண்டனும் கொடாக்கண்டனுமாகவே இரு தரப்பும் இருந்தது. இப்படி இரு தரப்பிலும் பிழைகள் இருந்ததுதான் என்று சொன்னாலே இரு தரப்பும் கொதித்தது. அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ்வதா என்று நாம் பொங்கினோம். தர மறுக்கிறவர்களிடம் அடித்துத்தானே பெறவேண்டும், அதைப் பிழையென்று சொல்வதா என நாம் கோபப்பட்டோம்.

அடித்து மிரட்டி அதிகாரங்களைப் பெற்றுவிட முடியாது என்று அவர்களும் திமிராகவே கோபப்பட்டார்கள். தனிநாட்டைத் தவிர்த்து வேறு அதிகாரங்களைப் பேசுவதானால் பேசலாம் என்று அவ்வப்போது சில தீர்வுத் திட்டங்களும் வைக்கப்பட்டன. தவற விட்டோம். ஆனால், ஒப்புக்கொள்ள மாட்டோம். அதெல்லாம் தீர்வா? என்று கேட்டுக்கொண்டே, அதையே இப்போது வை பார்ப்போம் என்று சவால் விடுவோம்.

நமது சமூகத்தைத் திருத்தவே முடியாது என்று சொல்லிக்கொண்டே எழுந்தார் நண்பர். நம்மை ஏன் திருத்த வேண்டும், அவர்களோ திருந்துகிறார்களேயில்லை... நாம் திருந்தி என்ன செய்வதாம்?

- ஆசிரியர்

# உடலில் பச்சை குத்துவது சட்டவிரோத செயல் அல்ல

## அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

உடலில் பச்சை குத்திக கொளவது சட்டவிரோதமானதல்ல என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எந்தவொரு நபரும் எத்தனை பச்சைகளையும் குததிக்கொள்ள முடியும். புத்தர், ஜேசு, அல்லஹ், ராமர், சீதை என யாருடைய உருவத்தையும் உடலில் பச்சையாக குத்திக்கொள்ள முடியும். உடலில் பச்சை குத்திக்கொள்வது மதத்தை இழிவுபடுத்தும் செயலாகக் கருதப்படமுடியாது.

உடலில் பச்சை குத்திக்கொள்வது 291பி குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டனை விதிக்கப்படக் கூடிய குற்றமாகாது. அண்மையில் நயோமி கொல்மன் என்ற பிரித்தானிய சுற்றுலாப் பயணி கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டமை பிழையானது.

மதமொன்றை ஏதோ ஓர் வகையில் இழிவுபடுத்தும் நபர்களை தண்டிக்கும் நோக்கிலேயே குறறவியல் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதில், பச்சை குத்துதல் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்ட மீறல்களில் ஈடுபடுவோருக்கு இரண்டாண்டு கால சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்க முடியும்.

பிரித்தானிய சுற்றுலாப் பயணி தொடர்பில் கோபம் கொண்ட ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் செயற்பட்டுள்ளனர், பொலிஸாரின் நடவடிக்கை பொறுப்புணர்ச்சியற்ற வகையில் அமைந்துள்ளது.

இலங்கை பௌத்தர்கள், மதசார் வசனங்களை பச்சையாக குத்திக் கொள்கின்றனர். ஜனாதிபதி மீது அன்பு கொண்ட ஒருவர் அவரது பெயரை பச்சை குத்திக் கொண்டுள்ளார்.

இதனை சட்டவிரோதமானதாகக் கருத முடியாது. சுற்றுலாப் பயணிகள் பச்சை குத்திக் கொள்வது தொடர்பில் பொலிஸார் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டுமெனபொலிஸ் மா அதிபரின் ஊடாக சகல காவல்நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகஅவர் தெரிவித்துள்ளார்.

## துரத்துகிறது வெள்ளைவான்

வெள்ளைவான் ஒன்றில் சிலர் தம்மைக் கொலை செய்யத் துரத்தி வருவதாக ஜாதிக பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் வட்டரக்கே விஜித தேரர் தெரிவித்துள்ளார். நான் செல்லும் இடங்களை வெள்ளை வான் ஒன்று பின் தொடர்கின்றது.

இது தொடர்பில் தெமட்டகொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்.

தம்மை பின்தொடர்ந்த வாகனத்தின் இலக்கம் போலியானது என்பதனை பொலிஸ் உத்தியோகத்தர்கள் கண்டு பிடித்துள்ளனர் என சிங்கள ஊடகமொன்றுக்கு விஜித தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனா அமைப்பின் நடவடிக்கைகளை வட்டரக்கே விஜித தேரர் கடுமையாக விமர்சனம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மகனைக் கடத்தப்போவதாக அச்சுறுத்தி ஆசிரியையிடம் கப்பம் பெற்றவர்கள் கைது

மகளைக் கடத்திச் செல்ல போவதாக அச்சுறுத்தி, வத்தளை பிரதேசத்தை சேர்ந்த ஆசிரியை ஒருவரிடம் கப்பம் பெற்ற மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் ஆசிரியையை மிரட்டி18இலட்சம் ரூபா கப்பம் பெற்றுள்ளனர்.

இவர்களில் 71 வயதான பாடசாலை பெண் அதிபரும், அவரது உறவு முறையிலான மகளும் அடங்குவதாக தெரியவருகிறது.

ஆரம்பத்தில் பெற்ற கப்பப் பணத்திற்கு மேலதிகமாக பணம் பெறும் நோக்கில் ஆசிரியையின் வீட்டுக்கு வந்த போது இவரகள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# 9 வயதுச் சிறுவனைத் தாக்கிய சிறியதந்தைக்கு விளக்கமறியல்

மன்னார் வங்காலையில் 9 வயதுச்சிறுவனை தாக்கி காயப்படுத்தியதாகக்கூறப்படும் சிறிய தந்தையை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சிறுவனின் தாயின், இரண்டாவது கணவரான சிறிய தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை குறித்த சிறுவனை அவருடைய சிறிய தந்தையார் கயிற்றினால் தாக்கியுள்ளார். இதன் போது கண் பகுதியில் காயமடைந்த குறித்த சிறுவன் உடனடியாக மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக வைத்தியர்கள் சிறுவனிடன் கேட்டபோது, குறித்த சிறுவன் வழங்கிய தகவலின் அடிப்படையிலே சிறிய தந்தையை மன்னார் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

விசாரணைகளின் பின் குறிதத நபர் மன்னார் நீதவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் காலை ஆஜர்படுத்தப்பட்ட போதே குறித்த நபரை எதிர்வரும் 14 தினங்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## கைதான அகதிகளிடம் இரகசிய பொலிஸார் விசாரணை

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்கு பயணித்துக் கொண்டிருந்த வேளையில் கைது செய்யப்பட்ட 54 பேர் திருகோணமலை துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டு, இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடற்படையின் இணையத் தளத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் இருந்து 20 கடல்மைல்கள் தொலைவில் அவர்களின் படகு கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு, குறித்த 54 பேரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் 30 ஆண்களும், 11 பெண்களும், 13 சிறார்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# வெப்பம் தாங்க முடியாது வெதும்பிவிழும் மாம்பிஞ்சுகள்

யாழ். குடாநாட்டுப் பகுதியில் சிலிர்த்துப் போய்க்கிடக்கும் மாம்பிஞ்சுகள் அண்மையில் அளவுக்கணக்கில்லாமல் வெதும்பி விழுவதாக உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடும் வெப்பம்,வறட்சி காரணமாகவே இந்த மாம்பிஞ்சுகள் வெதும்பி விழுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மணற்பாங்கான காணிகளிலும், வீடுகளிலும் பயிராகியுள்ள மாமரங்களின் காய்கள் மோசமாகப் பாதிக்கப்படுகின்றன.

மாமரங்கள் பொதுவாக பாதிக்கப்பட்டு வருகின்றபொழுதும் விளாட் மாம்பழங்களின் பிஞ்சுகளே பாதிக்கப்பட்டுள்ளது.

மணற்பாங்கான அரியாலைப் பகுதிகளில் மாமரங்கள் வாடிவதங்கிக் காணப்படுகின்றன.

வடக்குஅரியாலை, கிழக்கு அரியாலை, நாவலடி, கள்ளிக்காடு, கட்டைப்பிராய் மற்றும் தீவகப் பகுதிகளில் உள்ள மாமரச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக மேலும் தெரியவருகின்றது. (23)

# யாருடைய நலனுக்காக கூட்டமைப்பு அரசியல் தீர்வை தவிர்க்கின்றது?

**சங்கர சிவன்**

**இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்கப்போவதில்லை. எனவே, இராணுவம் வெளியேறினால்தான் அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தை என்ற கூட்டமைப்பின் நிலைப்பாடு அரசியல் தீர்வை நிரந்தரமாகத் தவிர்ப்பதற்கான தந்திரோபாய காய் நகர்த்தல். அரசியல் தீர்வில் அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொண்டு அரசியல் தீர்வை நிரந்தரமாகத் தவிர்க்கும் முகம் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உண்மை முகம். இந்த உண்மை முகத்தைத் தமிழ் மக்கள் கண்டுவிடக்கூடாது என்பதற்காகவே இனப்பிரச்சினைக்குச் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற பேச்சு.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருமலை மாநாடு எதிர்பார்த்தது போலப் பிரதான விடயத்தைத் தொடாமலே முடிந்திருக்கின்றது. அரசாங்கம் கூட்டமைப்பைப் பிளவுபடுத்த முயற்சிக்கின்றது என்றும் அதற்கு இடமளிக்காத வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்றும் சம்பந்தன் அங்கத்துவக் கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கத்துக்கு எதிராக உள்ளிருந்து எதிர்ப்புக் குரல் கிளம்புகின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் சம்பந்தன் இப்படியாக எச்சரிக்கை செய்வது வழமை. அனந்தி சசிதரனுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாய்ச்சல் கொட்டை எழுத்துச் செய்தியாகச் சில ஊடகங்களில் வெளியாகியிருந்தது. இவ்வளவு கெதியாக அனந்தி அம்பலப்படுவார் என்பது எதிர்பாராத செய்திதான். கூட்டமைப்புக்குள் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கையாளாக அவர் செயற்படுகின்றார் என்ற நீண்ட நாள் புகைச்சல் திருமலையில் வெடித்திருக்கின்றது.

திருமலை மகாநாடு இரண்டு குழுக்களை நியமித்திருக்கின்றது. கூட்டமைப்பைப் பதிவு செய்வதற்காக ஐந்து பேர் கொண்ட ஒரு குழு. எதிர்கால அரசியல் நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்கு எட்டுப் பேர் கொண்ட இன்னொரு

**சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்பது மக்களை ஏமாற்றுவதற்கான புலுடா. தனிநாடு கிடைக்கும் என்று நம்பிக்கையூட்டித் தமிழ் மக்களை அழிவு வரை கொண்டு சென்றதைப் போல இதுவும் அழிவு வரை மக்களை அழைத்துச் செல்லும் போலி நம்பிக்கை.**

குழு. இந்தக் குழு ஜெனிவாத் தீர்மானம், தென்னாபிரிக்க மத்தியஸ்தம் தொடர்பாகவும், எதிர்கால அரசியல் நடவடிக்கை தொடர்பாகவும் தீர்மானம் மேற்கொள்ளுமாம். அரசியல் தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பது பற்றிய பேச்சே இல்லை. ஊடக விவகாரங்களையும் இந்தக் குழுவே கையாளும். முன்னர் இவ்விடயத்தைக் கையாண்ட சுரேஷ் பிரேமச்சந்திரனும் இந்தக் குழுவில் உள்ளபோதிலும் அவர் முன்னர் போல் தனித் தீர்மானமாகக் கருத்துக்களை வெளியிட முடியாது. தமிழரசுக் கட்சித் தலைமை சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு வைத்த ஆப்பு இது.

அரசியல் தீர்வுக்கு என்ன அவசரம் என்ற தோரணையிலேயே கூட்டமைப்பு செயற்படுகின்றது. இனப்பிரச்சினை தான் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினை. மற்றைய பிரச்சினைகள் எல்லாம் அதிலிருந்து தோன்றியவை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் மற்றைய எந்தப் பிரச்சினையையும் முழுமையாகத் தீர்க்க முடியாது. எனவே, இனப்பிரச்சினையின் தீர்வு தான் தமிழ் மக்களுக்கு முக்கியமானதும் முதன்மையானதும். கூட்டமைப்புக்காரருக்கு இது தெரியாமலில்லை. அப்படியிருந்தும் அரசியல் தீர்வுக்கு என்ன அவசரம் என்று கேட்கின்றார்கள்.



புறச் சூழல் சரியாக அமைந்த பின்னரே அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பின் பேச்சாளர் என்ற முத்திரையோடு பல தடவைகள் கூறியிருக்கின்றார். இராணுவம் வெளியேறிய பின்னரே பேச்சுவார்த்தை என்று இதற்கு விளக்கமும் அளித்திருக்கின்றார். கூட்டமைப்பு அதன் செயற்பாடுகளில் அரசியல் தீர்வைத் தவிர்த்து வருவதை இந்தக் கோரிக்கையின் பின்னணியில் பார்க்கும் போதுதான் உண்மை முகம் தெரியும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்பதைத் தனிநாட்டு முயற்சிக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் கோரிக்கையாகவே அரசாங்கம் பார்க்கும். கூட்டமைப்பு சந்திரிகாவின் சமஷ்டித் தீர்வுத் திட்டத்தை நிராகரித்துப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டதையும் அரசியல் தீர்வைத் தவிர்த்து வேறு கோரிக்கைகளையே வலியுறுத்துவதையும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நிராகரிப்பதையும் பிரிவினைவாதப் புலம் பெயர் அமைப்புக்களுடன் நெருக்கமான உறவுகளைப் பேணும் சிறிதரன் போன்றவர்கள் தனிநாடு பற்றி வெளிப்படையாகவே பேசுவதையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது அரசாங்கத்தின் மேற்படி பார்வை நியாயமற்றது எனக் கூற முடியாது.

இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்கப்போவதில்லை. எனவே, இராணுவம் வெளியேறினால்தான் அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தை என்ற கூட்டமைப்பின் நிலைப்பாடு அரசியல் தீர்வை நிரந்தரமாகத் தவிர்ப்பதற்கான தந்திரோபாய காய் நகர்த்தல். அரசாங்கம் இராணுவத்தைப் பேச்சுவார்த்தைக்கு முன் வெளியேற்றப் போவதில்லை. இராணுவம் வெளியேறும் வரை கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்குச் சம்மதிக்கப் போவதில்லை.

அரசியல் தீர்வில் அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொண்டு அரசியல் தீர்வை நிரந்தரமாகத் தவிர்க்கும் முகம் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உண்மை முகம். இந்த உண்மை முகத்தைத் தமிழ் மக்கள் கண்டுவிடக்கூடாது என்பதற்காகவே இனப்பிரச்சினைக்குச் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற பேச்சு.

சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் நான்கு வருடங்களுக்கு மேலாகக் கூறுகின்றார்கள். ஆனால், சர்வதேசம் அரசியல் தீர்வில் அக்கறை கொள்கின்றது என்பதற்கான எந்தவொரு அறிகுறியும் இதுவரை இல்லை.

கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுகின்ற சர்வதேச சமூகம் தான் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கும் பின்னாலிருந்த நாடுகள். பதின்மூன்றாவது திருத்தத்தினுள் அதிகாரங்களை வடமாகாண சபைக்கு முழுமையாக வழங்க வேண்டும் என்று இந்த நாடுகளின் ஜெனிவாத் தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ளது. இதுதான் கூட்டமைப்பு பெரிதாகப் பேசும் சர்வதேச சமூகத்தின் அரசியல் தீர்வு. இந்தக் கருத்தை வலியுறுத்துபவர்கள் இலங்கையிலும் இருக்கின்றார்கள். இலங்கை அரசாங்கத்துக்குள்ளும் இருக்கின்றார்கள். அவர்களுடன் உறவை வளர்த்துச் சிங்கள மக்கள் மத்தியில் இக்கருத்தை எடுத்துச் செல்வதன் மூலம் சாதகமான பலனை அடைய முடியும். அந்த நடைமுறையை நிராகரித்து, ஜெனிவா மாநாட்டில் மேற்கத்திய நாடுகள் மூலம் இக்கோரிக்கையை முன்வைப்பது சாதகமற்ற சூழ்நிலையையே தோற்றுவிக்கும். சாதகமான வழிமுறைகளைப் பின்பற்றி ஒரு கோரிக்கையைநிறைவேற்றுவதில் அக்கறை இல்லாமல் பிரசாரப் 'பிளஸ்' பொயின்றில் அக்கறை செலுத்தும் அணுகுமுறையே இது.

சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்பினர் கூறுவதில் அணுவளவாவது உண்மை இருக்குமானால் இதுவரையில் எந்த நாடாவது தீர்வு முயற்சியில் இறங்கியிருக்க வேண்டும். அல்லது இவ்வாறான தீர்வையே இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கை ஆட்சியாளருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அப்படி எதுவும் நடக்கவில்லை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று பொதுப்படையாகக் கூறுவதைவிட்டு எந்த நாடு எவ்வாறான தீர்வுக்காகச் செயற்படுகின்றது என்பதைக் கூட்டமைப்புத் தலைமை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இது பற்றிக் கூட்டமைப்பினால் எதுவுமே கூற முடியாது. ஏனென்றால் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்பது மக்களை ஏமாற்றுவதற்கான புலுடா. தனிநாடு கிடைக்கும் என்று நம்பிக்கையூட்டித் தமிழ் மக்களை அழிவு வரை கொண்டு சென்றதைப் போல இதுவும் அழிவு வரை மக்களை அழைத்துச் செல்லும் போலி நம்பிக்கை.

தமிழ் மக்களின் வாக்குகளால் பதவிகளைப் பெற்ற கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரதான நலனைப் புறந்தள்ளும் வகையில் அரசியல் தீர்வைத் தவிர்ப்பது ஏன் என்ற கேள்வியை ஒவ்வொரு தமிழ் மகனும் இனியும் கேட்காமலிருக்க முடியாது. பிரிவினைவாதப் புலம் பெயர் அமைப்புகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான உறவைச் சரியாகப் புரிந்துகொள்ளும்போது இக்கேள்விக்கு விடை கிடைக்கும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று வருவதை இந்தப் புலம் பெயர் அமைப்புகள் விரும்பவில்லை. இனப்பிரச்சினை தீர்வின்றித் தொடர்வது தனிநாட்டுக்குச் சார்பான மனோநிலையை மக்களிடம் வளர்க்கும் என்ற கற்பனையில் இவை மிதக்கின்றன. இந்தப் புலம் பெயர் அமைப்புகளின் செல்வாக்குக்குள் கூட்டமைப்பு முழுமையாக வீழ்ந்துவிட்டது.

கூட்டமைப்பைத் தனிக் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பாக தமிழரசுக் கட்சித் தலைமைக்கும் மற்றைய கட்சிகளுக்குமிடையே ஒரு கட்டத்தில் முரண்பாடு பகிரங்கமாக வெடித்ததைத் தமிழ் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதிக்குக் கணக்கு வழக்கு இல்லை என்ற குற்றச்சாட்டு அப்போது தமிழரசுக் கட்சித் தலைமைக்கு எதிராக முன்வைக்கப்பட்டது. பிரிவினைவாதப் புலம் பெயர் அமைப்புகளிடமிருந்து கிடைக்கும் பணம் தான் இந்த வெளிநாட்டு நிதி. கூட்டமைப்பின் வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கும் புலம் பெயர் அமைப்புகளே நிதியுதவி செய்வதாக ஒரு தகவல். புலம் பெயர் அமைப்புகளிடமிருந்து பெருமளவு நிதியைப் பெற்றுக்கொள்ளும் கூட்டமைப்பு அவ்வமைப்புகள் கீறும் கோட்டை எப்படித் தாண்ட முடியும்? அரசியல் தீர்வைத் தவிர்க்க வேண்டும் என்ற புலம் பெயர் அமைப்புகளின் விருப்பத்தை எப்படி மீற முடியும்?

கூட்டமைப்பு எதிர்பார்க்கும் தீர்வை அரசாங்கம் முன்வைக்காத வரை புலம் பெயர் அமைப்புகளின் கோரிக்கையை நிராகரிக்க வேண்டிய தேவை கூட்டமைப்புக்கு இல்லை என்று பிரான்சில் சுரேஷ் பிரேமச்சந்திரன் இணையத்தளமொன்றுக்குக் கூறியது பற்றி உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது. புலம் பெயர் அமைப்புகளின் கோரிக்கை என்ன? அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

அழிவுகரமான தனிநாட்டுக் கனவில் மிதந்து கொண்டிருக்கும் புலம் பெயர் அமைப்புகளின் தேவைக்காகக் கூட்டமைப்புத் தலைவர்கள் அரசியல் தீர்வைத் தவிர்க்கின்றார்கள். இதன் மூலம் தமிழ் மக்களை அழிவுப் பாதையில் கொண்டு செல்கின்றார்கள்.


தமிழ் மக்கள் இப்போது விழித்துக் கொள்ளாவிட்டால் அழிவைத் தவிர்க்க முடியாது.

# நாட்டில் நேர்மையான சமுதாயத்தை சட்டத்தால் மட்டும் உருவாக்க முடியாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

**(கொழும்பு)**

**நேர்மையான சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு சட்டங்களால் மாத்திரம் முடியாது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



சிலாபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின்போது அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் சட்டத்துறை வீழ்ச்சி அடையவில்லை. சட்டத்தினால் மட்டும் பண்பான சமூகத்தை உருவாக்க முடியாது.

பண்பான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு விஹாரைகள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், கோயில்கள் போன்ற மத வழிபாட்டுத் தலங்களின் வழிகாட்டுதல் அவசியமாகின்றது.

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக சிலர் எம்மீது குற்றம் சுமத்துகின்றனர். இவர்களுக்கு கடந்த காலங்களில் இளைஞர், யுவதிகள் டயர்களினால் எரியூட்டப்பட்ட காலம் மறந்து போய்விட்டது.

எனினும் டயர் காலத்தை மக்கள் மறந்துவிடவில்லை. இன்று நாட்டு மக்கள் அச்சமும் பீதியும் இன்றி வாழக்கூடிய பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த வாய்ப்பினை மக்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றார்.

# கட்டண அதிகரிப்புக் கோரி பாரிய போராட்டம் நடாத்தப்படும்

## எச்சரிக்கிறது தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்



எதிர்வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் பணிப் புறக்கணிப்புப் போராடடம் முன்னெடுக்கப்படும் என அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்படா விட்டால் பாரியளவில் போராட்டம் நடத்த நேரிடும். எதிர்வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி முதல் அமுல் படுத்தப்படும் வகையில் பேருந்துக் கட்டணங்கள் 20 வீதத்தி னால் உயர்த்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

கடந்த ஆண்டில் 12 வீதம் கட்டணம் உயர்த்தப்பட வேண்டுமென கோரப்பட்ட போதிலும், 6 வீதமே உயர்த்தப்பட்டது.

டீசல் விலை உயர்த்தப்படாத போதிலும் ஏனைய அனைத்து செலவுகளும் உயர்வடைந்துள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

# பயங்கரவாதிகளின் நிழலைக்கூட நாட்டில் தோன்ற அனுமதிக்க மாட்டோம்

## இராணுவத் தளபதி சூளுரை



பயங்கரவாதிகளின் நிழலைக்கூட தோன்ற அனுமதிக்க முடியாது. இராணுவப் புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக உயர்த்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி தயா ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

போர் இடம்பெற்ற 30 ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பீடு செய்யும் போது புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பயங்கரவாதத்தின் நிழலைக் கூட தோன்ற அனுமதிக்கப்பட மாட்டாது.

அண்மையில் கோபி உள்ளிட்ட புலித் தலைவர்களை நெடுங்கேணியில் கொலை செய்வதற்கு சரியான புலனாய்வுத் தகவல்களே காரணமாகியது.

இராணுவ புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பே புலி உறுப்பினர்களை அடையாளம் கண்டு தாக்குதல் நடாத்த வழியமைத்தது.

தேசிய பாதுகாப்பு விவகாரத்தில் படையினர் நூறு வீத அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். இதனால் மக்கள் பாதுகாப்பு குறித்து அஞ்ச வேண்டிய அவசியமில்லை என்றார்.

# கொழும்பு நகரத்தின் நீர்மட்டம் உள்ளிறங்குகிறது

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

நிலத்தடி நீர் அதிகளவில் உறிஞ்சப்படுவதால் கடலோர நகரங்களின் நிலமட்டம் வேகமாக உள்ளிறங்குவதாக நிலவியல் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னை, கொழும்பு போன்ற கடலோர நகரங்கள் இதனால் கூடுதலாக பாதிக்கப்படுவதாக விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுற்றுச்சூழலில் ஏற்பட்டுவரும் கடுமையான பாதிப்புக்கள் காரணமாக புவியானது வேகமாக வெப்பமடைந்து வருகிறது. இதன் விளைவாக கடலின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதால் சென்னை, கொழும்பு போன்ற கடலோர நகரங்களின் கடற்கரையோர பகுதிகள் படிப்படியாக கடலில் மூழ்கும் ஆபத்து அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் முன்னரே எச்சரித்திருந்தனர்.

உலகின் சில பகுதிகளில் கடல்நீர் மட்டம் அதிகரிப்பதை விட, நிலம் உள்ளிறங்குவது என்பது மோசமான பிரச்சினையாக மாறிவருவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலவியல் விஞ்ஞான ஒன்றிய அவையின் கூட்டத்தில் பேசிய விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

சில கடலோர நகரங்களில் கடலின் நீர்மட்டம் அதிகரிக்கும் வேகத்தைவிட, நிலப்பகுதியானது பத்து மடங்கு அதிக வேகமாக உள்ளிறங்கிக் கொண்டிருப்பதாக அவர்கள் எச்சரித்திருந்தனர்.

இந்த நிலம் உள்ளிறங்குவதற்கு பெருமளவு மனிதனே நேரடி காரணம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

உதாரணமாக டோக்கியோ நகரில் வரைமுறையின்றி நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்ததால், அந்நகரின் நிலமட்டம் சில இடங்களில் சுமார் இரண்டு மீற்றர் ஆழத்துக்கு உள்ளிறங்கியது.

ஒருவழியாக அங்கு நிலத்தடி நீரை உறிஞ்சி எடுப்பதற்கு கடும் தடை விதிக்கப்பட்ட பிறகே நிலம் உள்ளிறங்கும் செயல் நின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் முதலீடு செய்ய அச்சம் கொள்ளும் முதலீட்டாளர்கள்

## கூறுகிறார் பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா



இலங்கையில் முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர்கள் அஞ்சுவதாக பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹோட்டல் நிர்மாணம் தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றில் மூன்று விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆளும் கூட்டணிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய மற்றும் எதிர்க்கட்சிகள் இந்தச் சட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டன. இதனால் முதலீட்டாளர்கள் மத்தியில் ஐயம் ஏற்பட்டுள்ளது.

முதலீடு செய்ததன் பின்னர் பாரிய சவால்களை எதிர்நோக்க நேரிடுமோ என முதலீட்டாளர்கள் அஞ்சுகின்றனர்.

முதலீட்டாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பங்களை தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். வர்த்தமானி அறிவித்தலில் கசினோ பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

பல்வேறு போட்டிகளுக்கு மத்தியில் முதலீட்டாளர்கள் நாட்டுக்குள் அழைத்து வரப்படுகின்றனர். அவர்கள் மத்தியில் நம்பிக்கை இழக்கப்பட்டால் அது நாட்டைப் பாதிக்கும்.

வாழ்க்கையில் சந்தித்த மிக சவால் மிக்க ஊடகவியலாளர் சந்திப்பு இது என அவர் குறிப்பிட்டுள்ளார். ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# உலக இளைஞர் மாநாட்டில் 28 சர்வதேச அமைச்சர்கள்

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள உலக இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இதுவரை 169 நாடுகள் உறுதி செய்துள்ளன.

இதேவேளை இளைஞர் விவகாரங்கள் தொடர்பான அமைச்சர்கள் 28 பேரும் அதிகாரிகள் மட்டத்தில் 62 பேரும் இலங்கை வருகின்றனர் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்று முன்தினம் தெரிவித்தார்.

உலக நாடுகளிலிருந்து சுமார் 6500 விண்ணப்பங்களும் இலங்கையிலிருந்து 3200 விண்ணப்பங்களும் கிடைத்தன. எனினும் 350 பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் விதத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த உலக இளைஞர் மாநாடு மட்டுமல்ல இலங்கையில் இளைஞர் சேவைகள் மன்றமும் அரசியல் கலக்காத, நிறம் மதம் கலக்காத ஒன்றாகவே இயங்குகிறது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ள நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்க்கட்சியிலுள்ள இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள்.

எல்லோருக்கும் எழுத்து மூல அழைப்பையும் விடுத்திருக்கிறோம் என்றார்.

# சமூகச் சீர்கேட்டுக்கு இடமளிக்கப்படமாட்டாது

## பிரதமர் உறுதி

சமூகச் சீர்கேட்டை விளைவிக்கக் கூடிய வர்த்தகங்களை ஆரம்பிக்க தற்போதைய அரசாங்கம் ஒருபோதும் இடம் அளிக்கப் போவதில்லை என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார். களுத்துறை, தொடங்கொட விகாரை ஒன்றில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார். சமூகச் சீர்கேட்டை விளைவிக்கும் வர்த்தகம் தொடர்பில் யோசனை நிறைவேற்றப்பட்டுள்ளத்தாக சில குழுக்கள் முன் வைக்கும் பிரசாரங்கள் பலன் அற்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பெயர்ப்பலகைகளில் தமிழ்ப்பிழை விசாரணை நடாத்த ஏற்பாடு

பெயர்ப் பலகைகளில் காணப்படும் தமிழ்ப் பிழைகள் தொடர்பில் விசாரணை நடாத்தப்படவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். அரசாங்க நிறுவனங்களில் காணப்படும் பெயர்ப் பலகைகள் தமிழ் மொழிபெயர்ப்பில் பிழைகளும் எழுத்துப் பிழைகளும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் காணப்படும் பெயர்ப் பலகையில் தமிழ் மொழிப் பிழைகள் காணப்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் இவ்வாறான தவறுகள் நடைபெற இடமளிக்க முடியாது. இவ்வாறான பிழைகள் திருத்தப்படும் என்றார்.

# அரசு எமக்கு வாக்குறுதியளித்தது போல்

# இதுவரை எவற்றையும் வழங்கவில்லை

## வடமாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு

அரசு எமக்கு வாக்குறுதியளித்தது போல் இதுவரை எவற்றையும் வழங்கவில்லை. இதனால் நாம் எதுவுமற்ற வடக்கு மாகாணசபை ஆட்சியை முன்னெடுக்கின்றோம்.

ஜனாதிபதியிடம் இருந்து அரசியல் ரீதியான நல்லெண்ண சமிக்ஞைகள் கிடைத்தால் மட்டும் நாம் நல்லாட்சி செய்யலாம்.

இவ்வாறு வடக்குமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கொழும்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளன குழுவிற்கு நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளன தலைவர் சுரேஷ் கேசா தலைமையிலான ஐவர் கொண்ட குழு சந்தித்து வடக்கு மக்களுடனும் வியாபார கைத்தொழில் முயற்சியாளர்களுடனும இணைந்த வகையில் முன்னெடுப்பது தொடர்பிலான சந்திப்பை மேற்கொண்டனர்.

அதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸவரன் மேலும் தெரிவித்ததாவது,

பெரும்பான்மையான வாக்குகளுடன் நாம் வடமாகாண சபையை கைப்பற்றினோம். ஆனால் இதுவரை வடக்கு மாகாண சபையினால் எந்த முன்னெடுப்பும் இல்லாத சூழல் காணப்படுகின்றது.

ஜனாதிபதியிடம் இருந்து நல்ல சமிச்ஞைகள் கிடைத்தால் மட்டுமே வடக்கின் அபிவிருத்தியை, வர்த்தக முன்னெடுப்பை முன்னெடுக்கலாம்.

எனவே நாம் ஒருங்கிணைந்த அடிப்படையில் திட்டங்களை நிறைவேற்றுவோம் என அக் குழுவிற்கு தெரிவித்தார். (92)

# வீட்டிலிருந்தவரை இனந்தெரியாதோர்

# வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர்

அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜோன் கெனடி ஜோரின் என்பவரை வீட்டினுள் நுழைந்த சந்தேக நபர்கள் வெட்டிக் காயப் படுத்தியுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் தொடர்பில் முறைப்பாட்டாளர் ஏற்கனவே பொலிஸாருக்கு தகவல் வழங்கினார் என்ற சந்தேகத்திலேயே இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் இம்முறைப்பாட்டாளர் மேற்படி சந்தேக நபர்களைத் தாக்கியதாக சின்னராசா அனுஸ்டன் என்பவர் 1 ஆம் திகதி இன்னுமொரு முறைப்பாட்டை பதிவு செய்துள்ளதோடு இருதரப்பையும் சேர்ந்த 5 பேர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

## வீதியை புனரமைக்குமாறு சிறுப்பிட்டி மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி கலை ஒளி வீதியினை புனரமைப்புச் செய்வதற்காக கற்கள் பரவப்பட்டு 8 மாதங்கள் கடந்த நிலையிலும் இந்த வீதி திருத்தப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாதுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த வீதியினை பல்வேறு தரப்பினரும் பயன்படுத்தும் நிலையில் மீள்புனரமைப்புக்கென வீதி ஓரங்களில் குவிக்கப்பட்டுள்ள கற்கள் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்படுவதோடு அந்த வீதியால் துவிச்சக்கரவண்டியில் செல்வோர் விபத்துக்குள்ளாகும் அபாய நிலையும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, குறித்த வீதியினை வெகுவிரைவில் புனரமைப்புச் செய்துதருமாறும் ஏற்படவிருக்கும் விபத்துக்களை குறைக்குமாறும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

## தேங்காயின் விலை தென்மராட்சியில் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் தெங்கு உற்பத்தி அதிகமாக உள்ள நிலையில் தற்போது தேங்காயின் விலை வீழ்ச்சியடைந்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் 40 ரூபா முதல் 60 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த தேங்காய் தற்போது 20 ரூபா முதல் 40 ரூபாவிற்கு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தற்போது ஏற்பட்டுள்ள தேங்காய் விலை வீழ்ச்சியினால் தென்மராட்சிப் பிரதேசங்களில் உள்ள கிராமங்களில் இருந்து வடமராட்சி, வலிகாமம், தீவகம், நல்லூர் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் விற்பனை செய்வதற்காக வியாபாரிகள் மேட்டார்சைக்கிள், சைக்கிள் மற்றும் பெரியவாகனங்களிலும் வந்து பெற்றுக்கொள்வதனைக் காணக்கூடியதாக உள்ளது.

# மகிநத ஆடசி தமிழாகளுககு மடடுமலல

# சிஙகள மககளுககும எதிரானது

## செந்தில்வேல் குற்றச்சாட்டு

தமிழர்களுக்கு மட்டும் எதிரான ஆட்சியல்ல மகிந்த ராஜபக்ஷவின் ஆராஜக ஆட்சி பெருமபான்மை சிங்கள மக்களுக்கும் எதிரான ஆட்சி என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.


இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சிப் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் கடந்த வியாழக்கிழமை கட்சியின் மேதினக்கூட்டம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது தெரிவித்தார்.

செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தர்ர்.

"இடதுசாரி அமைப்புக்களின் ஒன்றிணைவை உருவாக்கி மக்களிடையே காணப்படும் இன, மத, மொழிப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கமே முக்கியமாகும். பொத்துஹெர நேரடிரயில் மோதல் விபத்தில் மாட்டிமீண்ட நான் வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய எமது புரட்சிகர மேதினக் கூட்டங்களில் கலந்து பேசுகிறேனெண்டால் தொழிலாள மக்களின் விசுவாசத்தாலெண்றே கருதுகிறேன். இரத்த வெள்ளத்தில் இருக்கும் போதும் என்னுடைய எண்ணம் இந்த மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் எண்டே சிந்தித்தது என்றார்.

இக்கூட்டத்தில் பெண்கள் அமைப்பாளர் ஈஸ்வரி சம்புலிங்கம், சட்டத்தரணி தேவராசா, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தவராசா, க.தணிகாசலம், கா.சிவலிங்கம், ஜெயசீலன், சீனிவாசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (68)

# புலவியோடை நாகதம்பிரான் ஆலய திருப்பணிவேலைகள்



நாகர்கோவில் வடக்கு அருள்மிகு புலவியோடை நாகதம்பிரான் ஆலயத்தின் திருப்பணிவேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கடந்த 25 ஆம் திகதி காலை 9:50 மணியளவில் களஞ்சிய திருப்பணிக்காக அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திருப்பணிவேலைகளில் ஜெயரட்ணம் கருஷனின் நேர்த்திக்காக பொறுப்பேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சமுர்த்தி உத்தியோகத்தர் செயலமர்வு மன்னார் மாவட்டத்தில்

அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அறிவுறுத்தலின் பேரில் மன்னார் மாவட்டத்திலுள்ள அபிவிருத்தியை முன்னிட்டு மாந்தை மேற்கு மன்னார், மடு, நானாட்டான், முசலி ஆகிய பிரதேசங்களில் பணியாற்றும் சமுர்த்தி அதிகாரிகளுக்கான விசேட செயலமர்வு எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் அந்தந்த பிரதேச செயலகங்களில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண எதிர்க்கட்சி பிரதம கொளுடா றிப்கான் துரித அபிவிருத்தியில் சமுர்த்தி அதிகாரிகளின் பங்களிப்புப் பற்றி கலந்துரையாடவுள்ளார்.

## முரசின் இன்றைய பலன்




(04.05.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் சித்திரை மாதம் 21 ஆம் திகதி.
பஞ்சமி / சித்தம்.
திருவாதிரை நட்சத்திரம். பி.ப. 03.55 வரை. பின் புனர்பூசம்.
இராகு காலம 04.26 - 05.56 வரை. சுபநேரம 08.56 - 10.26 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | முரண்பாடு விலகியதால் குடும்பத்தில் கவின் நிலை ஏற்படல், பொருள் கொள்வனவுக்கு திடீர் பயணம் ஏற்படல். |
| ரிஷபம் | வங்கி மூலம் எதிர்பார்த்த உதவி கிட்டியதால் மகிழ்ச்சி, விற்பனையை அதிகரிக்க புதிய யுக்திகளைக் கையாள முடிவெடுத்தல். |
| மிதுனம் | காரியத்தைக் கவனமுடன் பார்த்துக்கொள்ளாவிடின் வீண் விரயங்கள் ஏற்படும், உணவுக்கட்டுப்பாட்டை மேற்கொள்ள திடசித்தமான முடிவு எடுத்தல். |
| கடகம் | முக்கிய பொறுப்புக்களில் இருக்கும் உங்களுக்கு திகைக்க வைக்கும் இடமாற்றம் ஏற்படும், சம்பாத்தியம் அனைத்தும் செலவாகி சஞ்சலத்தைத்தரும். |
| சிம்மம் | தெளிவாக முடிவெடுக்க இயலாமல் சஞ்சலங்கள் ஏற்படும், பகைமையைக் கைவிட்டதால் ஒத்துழைப்புக்கிட்டி நன்மை விளைதல். |
| கன்னி | எதிர்பார்த்திருந்த சலுகைகள் கிடைக்க காலதாமதப்படலாம், ஆரம்பத்தில் பிரச்சினை ஏற்படுத்திய விடயம் பின்னர் சுமுக நிலையை ஏற்படுத்தல் |
| துலாம் | எதிர்பாராத இழவுச் செய்தியால் சுபகாரிய நிகழ்வினை ஒத்தி வைத்தல், எதிர்பார்ப்பு நிறைவேற அனுசரித்துப் போகும் நிலையைக்கைவிடாமை. |
| விருச்சிகம் | செய்தொழிலில் திட்டமிடாமையினால் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடல், புதியமனை அமைக்க வாசுபாத்து சோதிடப்படி இடம் அமைக்க சோதிடரை நாடல். |
| தனுசு | பிரச்சினைகளில் இருந்து விடுபட பிடிவாதத்தைத் தளர்த்திக்கொள்ளுங்கள், காரியங்கள் ஆமைவேகத்தில் நடைபெற்றாலும் வெற்றி இலக்கு தக்க வைக்கப்படும். |
| மகரம் | திட்டமிட்டிருந்த காரியம் திசைமாறிச் சென்றதால் அனுகூலம் அற்றுப்போதல், பங்குத்தொழிலைக் கௌரவம் முன்னிட்டு முறிந்துவிடல். |
| கும்பம் | விவாக முயற்சிக்காக தரகர்களைச் சந்திக்கச்செல்லுதல், காலாவதியான பொருட்களைப் பெற்றதால் குடும்பத்தில் ஏகளை ஏற்படல். |
| மீனம் | புதிய இடத்தில் தொழில் ஆரம்பிக்கும் எண்ணம் உதயமாகும், சமயோசிதப்புத்தியால் நேரம்போகும் என எதிர்பார்த்து விபத்து விலகிவிடல். |

# நண்பர்களின் சமரில் வித்தியானந்தா வெற்றி



இப்ராஸ், அருணா ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் நண்பர்களின் சமர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் மற்றும் முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிகளுக்கிடையிலான நண்பர்களின் சமர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நிறைவடைந்தது.

முதல் இனிங்ஸிற்காக ஒரு விக்கெட்டை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி தொடர்ந்தது. முதல் நாள் ஆட்டத்தில் அதிரடியாக ஆடிய இப்ராஸ் மேலும் 11 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்து கம்சிகாந்தின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய வித்தியானந்தாக் கல்லூரி அணி வேகமாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் வித்தியானந்தாக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக 31 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இப்ராஸ் 47, நிலோஜன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கம்சிகாந் 18 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, விதுரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

41 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி அருணாவின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக் களையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விதுன் 38, கலைச்செல்வன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அருணா 37 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு, வினோசன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 126 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி, இப்ராஸின் பொறுப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியில் வித்தியானந்தாக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் இப்ராஸ் ஆட்டமிழக்காது 67, வினோசன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கம்சிகாந் மூன்று, கலைச்செல்வன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் வித்தியானந்தாக் கல்லூரி வீரர் இப்ராஸ், சிறந்த பந்து வீச்சாளராக கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வீரர் கம்சிகாந், சிறந்த களத்தடுப்பாளராக விசாகன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்தொடரில் முதல் வெற்றியை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வில் இருபாடசாலைகளின் அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், ஆசிரியர்கள், ஆதரவாளர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (எஸ்.பி.)

# வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்த வன்னியின் போர்

## விளையாட்டுச் செய்திகள்



(கிளிநொச்சி)

வன்னியின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி கன மழை காரணமாக வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

கிளிநொச்சி மகாவித்தியாலயம், முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான வன்னியின் போர் என வர்ணிக்கப்படுகின்ற கிளி-முல்லை நட்புறவுக் கிண்ண இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நிறைவடைந்தது.

முதல் இனிங்ஸிற்காக விக்கெட் இழப்பின்றி 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை கிளிநொச்சி மகாவித்தியாலய அணி தொடர்ந்தது. ரஜீபன் மற்றும் விதுஷன், நிதுஷன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி முதல் இனிங்ஸிற்காக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் ரஜீபன் 41, விதுஷன் 40, நிதுஷன் 30, பிரகாஷ் 29, டிலக்ஷன் 11, கஜீபன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தயான், தஜிசன் ஆகியோர் தலா மூன்று, லகிந்தன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

127 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி களமிறங்க முற்பட்டவேளை கனமழை பொழிய ஆரம்பித்தது. இடைவிடாது தொடர்ந்த கன மழை காரணமாக போட்டியை மேலும் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக இப்போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக சகல துறையிலும் கலக்கிய கிளிநொச்சி மகாவித்தியாலய வீரர் ரஜீபன், சிறந்த களத்தடுப்பாளராக விதுஷன், சிறந்த பந்து வீச்சாளராக விதுஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். வெற்றிக் கிண்ணங்களை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் வழங்கிக் கௌரவித்தார். இப்போட்டி நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(29,93)



# இங்கிலாந்தில் சாதிப்போம்

(லண்டன்)

இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் மற்றும் டெஸ்ட் தொடர்கள் சவால் மிக்கவை என்ற போதிலும் சிறந்த வியூகங்களை அமைத்து சவால்களை முறியடித்து வெற்றிபெற முயற்சிக்கவுள்ளதாக இலங்கை அணியின் இடைக்காலப் பயிற்றுநர் மார்வன் அத்தப்பத்து மற்றும் அணிக் கப்டன் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்து, அயர்லாந்து அணிகளுக்கெதிரான கிரிக்கெட் தொடரின்போது இளம் வீரர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. அவர்கள் இலங்கை அணியில் நிலையான இடத்தைப் பிடிப்பதற்கான முயற்சியில் இறங்குவர். இதன் மூலம் இலங்கை அணி இயல்பாகவே பலமான நிலையை அடையும் என்று நம்புகின்றேன் என கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இங்கிலாந்தை அதன் சொந்த மண்ணில் வெற்றி கொள்வது கடினமானபோதிலும் அது இயலாத காரியமில்லை. இதற்கு முன்னர் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டி ஒன்றில் நாங்கள் வெற்றிபெற்றிருப்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். அர்ப்பணிப்புடன் போட்டிக் களத்தில் செயற்பட்டால் நிச்சயம் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை அணியின் இடைக்காலப் பயிற்றுநர் மார்வன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

## வென்றது ஸ்கந்தா ஸ்ரார்ஸ்

(சுன்னாகம்)

நட்புறவு கிரிக்கெட் போட்டி ஒன்றில் சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அணி வெற்றிபெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார்ஸ் மற்றும் இணுவில் கலையொளி அணிகளுக்கிடையிலான நட்புறவு ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஒன்று அண்மையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இணுவில் கலையொளி அணி 26.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மகாராஜ் 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சிந்துஜன், மிதுஷாந் ஆகியோர் தலா மூன்று, ஜனக்ஷன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 105 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அணி 16.2 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் துபிஷன் ஆட்டமிழக்காமல் 48, துவாரகன் 25, ஓட்டங்களைப் பெற்றனர். (48)

# ஊர்காவற்றுறை பிரதேச விளையாட்டு விழா
# நாரந்தனை அண்ணா முதலிடம்



(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலக விளையாட்டு விழாவின் வெற்றிக் கிண்ணத்தை நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகம் கைப்பற்றிக் கொண்டது.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக விளையாட்டுவிழா கடந்த 30ஆம் திகதி ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதி நாள் நிகழ்வில் தடகளப் போட்டிகள் நடைபெற்றது. பெருவிளையாட்டுப் போட்டிகளில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகம் சிறப்பாகச் செயற்பட்டு வெற்றிகள் பலவற்றைப் பெற்றது. இதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், மென்பந்து கிரிக்கெட், கபடி, எல்லே, கால்பந்து ஆகிய போட்டிகளில் முதலிடத்தைப் பிடித்து அசத்தியது.

ஒட்டுமொத்தப் புள்ளிகள் அடிப்படையில் 57 புள்ளிகளைப் பெற்று நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகம் முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இரண்டாமிடத்தை தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகம் 55 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

# அல்வாய் நண்பர்கள் கால்பந்து இன்று இறுதிப் போட்டி





(அல்வாய்)

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடாத்திய அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்று மாலை 4.00 மணிக்கு அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதவுள்ளன.

இப்போட்டி பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (48)

# வடமாகாண மட்ட மல்யுத்தப் போட்டி
## பொலிகை மைந்தர்கள் ஐவருக்குப் பதக்கம்

(பொலிகை)

வடமாகாண வீரர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட மல்யுத்தப் போட்டியில் பொலிகை மைந்தர்கள் ஐவர் பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண வீரர்களுக்கிடையிலான மல்யுத்தப் போட்டி கடந்த 24ஆம் திகதி முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் 65-70 கிலோ எடைப் பிரிவில் கணேசமூர்த்தி நிராஜ் முதலாமிடத்தையும், 60-65 கிலோ எடைப் பிரிவில் நற்குணராசா திலக் முதலாமிடத்தையும், 70-75 கிலோ எடைப் பிரிவில் கணேசமூர்ததி அகில்ராஜ் இரண்டாமிடத்தையும், 75-80 கிலோ எடைப் பிரிவில் குழந்தைவேல் விசிதன் இரண்டாமிடத்தையும், 55-60 கிலோ எடைப் பிரிவில் கதிரமலை சுலக்ஷன் மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டனர்.



இப்போட்டியில் வெற்றியீட்டி வீரர்கள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள தேசிய மட்ட மல்யுத்தப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்கப் பணிப்பாளர் ராஜரணசிங்க தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (116)

# ஒரு நாள் அணியில் மீண்டும் அண்டர்சன்

(லண்டன்)

ஸ்கொட்லாந்து அணியுடன் ஒருநாள் போட்டியில் விளையாடவுள்ள இங்கிலாந்து அணியில், வேகப்பந்துவீச்சாளர் அண்டர்சன் சேர்க்கப்பட்டுள்ளார். அவுஸ்ரேலியா மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் போட்டித் தொடர்களில் அண்டர்சனுக்கு ஓய்வளிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அவர் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார். துடுப்பாட்டப் பயிற்சியாளர் கிரகாம் கூச் பதவி விலகியுள்ள நிலையில், அவருக்குப் பதிலாக மற்றொரு முன்னாள் வீரர் கிரகாம் தோர்ப் பொறுப்பேற்றுள்ளார். அலஸ்டர் குக் தலைமையில் மொத்தம் 13 வீரர்கள் அடங்கிய அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்து - ஸ்கொட்லாந்து அணிகள் மோதும் ஒருநாள் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி அபர்தீன் மைதானத்திலும், ருவென்ரி-20 போட்டி 20ஆம் திகதி லண்டன் ஓவல் மைதானத்திலும் நடைபெறவுள்ளது. இங்கிலாந்து: குக், மொயீன் அலி, அண்டர்சன், கேரி பேலன்ஸ், இயன் பெல், ரவி போபாரா, பட்லர், ஹரி கர்னி, கிறிஸ் ஜோர்டான்,இயன் மோர்கன், ஜோ ரூட், ஜேம்ஸ் டிரெட்வெல், கிறிஸ்வோகஸ்.

## ஹோலியின் மனப்பயிற்சி

ஓர் ஆட்டத்திற்கு அணியினருடன் பேருந்தில் செல்லும்போதே களத்தில் எப்படி செயற்பட வேண்டும் என்பதை மூளையில் திட்டம் வகுத்து விடுகிறேன் என இந்திய அணியின் நட்சத்திர வீரர் ஹோலி தெரிவித்துள்ளார்.

மைதானத்திற்கு பேருந்தில் செல்லும்போதே நான் என்ன ஷொட் விளையாடவேண்டும் என்பதை தீர்மானித்துக் கொள்கிறேன். அதேபோல் எந்தப் பந்து வீச்சாளரை எப்படி எதிர்கொள்ளவேண்டும் என்பதையும் திட்டமிடுகிறேன். முதலிலேயே மூளைக்கு பயிற்சி கொடுத்துவிட்டால் களமிறங்கும்போது அனைத்து சவால்களையும் துல்லியமாக முறியடிக்கலாம்.

நான் நிறைய ஆட்டச்சூழ்நிலைகளை கண் முன் கொண்டு வந்து பார்ப்பேன். எந்தப் பந்து வீச்சாளரைச் சந்திக்கப்போகிறேன் என்பதை என் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துவேன். என்னுடைய பலம் களத்தில் தீவிரமாகச் செயற்படுவதே. இதனைத் தொடர்ந்தும் தக்கவைக்க விரும்புகின்றேன். நான் ஒருபோதும், கடந்த இன்னிங்ஸ், ஆட்டங்களை நினைத்துப் பார்ப்பதில்லை என்னைப் பொறுத்தவரை அடுத்த ஆட்டத்தில் என்ன செய்யப் போகிறோம் என்பதில்தான் முழுக் கவனம் செலுத்துவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மும்பை அணியின் தொடர் தோல்வி காரணம் ஜாம்பவான்களா?
## கேள்வி எழுப்புகிறார் டீன் ஜோன்ஸ்

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் புள்ளிக் கணக்கை ஆரம்பிக்காத ஒரே அணி நடப்புச் சம்பியன் மும்பை இந்தியன்ஸ் தான். அந்த அணி தொடர்ச்சியாக 5 தோல்விகளைத் தழுவியதற்கு ஜாம்பவான்கள் தான் காரணம் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரரும், விமர்சகருமான டீன் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

மும்பை அணியின் அடையாளமாக சச்சின் டெண்டுல்கர் உள்ளார். சமீபத்தில் ஆலோசகராக, தலைச்சிறந்த கிரிக்கெட் வீரர்களில் ஒருவராக விளங்கிய அவுஸ்ரேலியாவின் ரிக்கிபொண்டிங் நியமிக்கப்பட்டார். தலைமை பயிற்சியாளராக நியூசிலாந்தை சேர்ந்த ஜோன்ரோட்ஸ் உள்ளார். இதே போல் ஜோன்டிரோட்ஸ், அனில் கும்ளே ஆகியோரும் அணியின் நிர்வாகத்தில் முக்கிய பங்காற்றி வருகிறார்கள். தங்களை சுற்றி அதிகமான ஜாம்பவான்கள் இருப்பதால் களத்தில் வீரர்கள் தங்களது சொந்த விருப்பப்படி முடிவுகளை எடுப்பதில் பயப்படுகிறார்கள் என்பது தெளிவாக தெரிகிறது. இத்தனை சிறந்த ஜாம்பவான்கள் அணியுடன் இருப்பது நல்ல விடயம் தான். ஆனால் அதுவே அளவுக்கு மீறிப் போய் விட்டதோ? என்ற கேள்வி இல்பாகவே எழும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

INDIAN PREMIER LEAGUE 2014

## இன்றைய ஆட்டம்

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் எதிர்

கைதராபாத் சன் ரைஸ்

இடம்: பெங்களூர்.

நேரம்: இரவு 8 மணி

# அழிவுப்பாதையை சுட்டும் ஊடகங்கள்



புலிகளின் முற்றுமுழுதான அழிவிற்கு பின்னர், வடக்கு மாகாணசபையின் நிர்வாகத்தினை தமிழர்கள் கைப்பற்றியது என்பது வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே பொதுவாக கருதப்படுகின்றது. ஏனெனில் "தமிழீழம்" கேட்டவர்கள், இந்தச் சபையினை வைத்தே இலங்கையில் "தமிழ் அரசியல் பண்ண வேண்டுமென்ற" துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். அதனால் தானோ என்னவோ மாகாண சபையை தமிழ்க் கூட்டமைப்பு வென்றவுடன், "அமைந்தது தமிழரசு" என்று அறிவித்து மகிழ்ந்தது கூட்டமைப்பின் பத்திரிகை. (தமிழரசை வைத்துக் கொண்டு தமிழர்கள் என்ன செய்வார்கள் என்பதை அதன்பிறகு கண்டுவருகிறோம்...)

இலங்கையில் 9 மாகாண சபைகள் இயங்கி வருகின்ற போதிலும், வடக்கு மாகாண சபை தொடர்பான செய்திகளையே இலங்கை தமிழர் சார் தமிழ், ஆங்கில ஊடகங்கள் முக்கியத்துவப் படுத்துகின்றன. (இதற்கு விதிவிலக்காக விரல்விட்டு எண்ணக்கூடிய ஊடகங்களும் உள்ளன) வடக்கு மாகாண-சபை தமிழர் பிரதேசங்களை உள்ளடக்கியது என்பதால் தான் பெரும்பாலான தமிழ், ஆங்கில ஊடகங்கள் இந்த முக்கியத்துவத்தினை வழங்குகின்றன என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் கிழக்கு மாகாண-சபையும் (மூவின மக்கள் ஏறத்தாழ சமஅளவில் வாழ்ந்தாலும்) பாரம்பரியன தமிழர் பிரதேசங்களை உள்ளடக்கியதுதான். மேலும் இந்த கிழக்கு மாகாணசபை இயங்குகின்றதா இல்லையா அல்லது எப்படி இயங்குகின்றது என்பவைபற்றி இந்த ஊடகங்கள் அதிகம் அலட்டிக் கொள்ளாததால், தமிழர்களில் கணிசமா-னவர்களும் அதனைப்பற்றி அக்கறைப்படுவதும் கிடையாது.

2013 ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிகழ்ந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வெற்றி பெறப்போகின்றது என்பது நன்கு, தெளிவாக தெரிந்திருந்தும், தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் "வானவில்" பத்திரிகையிலும் வடக்கு மாகாணசபை பற்றி பல விடயங்கள் எழுதப்பட்டுள்ளன. கடந்த 65 வருடகால (தமிழ் காங்கிரஸ், தமிழரசு, தமிழர் விடுதலைக் கூட்டணி, புலிகள்) அரசியலை போலவே, மீண்டும் தமிழ் குறுந்தேசியவாதத்தினுள் வடக்கு மாகாணசபையும் அமிழ்ந்துவிடப் போகின்றது என்ற ஆபத்தினை உணர்ந்தே "வானவில்" கருத்துக்களை வெளியிட்டிருந்தது. வடக்கு மாகாண-சபையில் நிறைவேற்றப்படும் பிரேரணைகளையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்-பில் தெரிவான உறுப்பினர்களின் மாகாணசபைக்குட்பட்ட அதிகாரம் சாராத, மீறிய செயற்பாடுகள், மற்றும் பத்திரிகை அறிக்கைகளைப் பார்க்கும்போது "வானவில்"இன் கருத்துக்களை மெய்ப்பிப்பதாகவே உள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் வெற்றி பெற்று, தற்போதைய வடக்கு மாகாணசபையில் அங்கம் வகிக்கும் 30உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் புலிகளின் "உற்பத்தி" என்பதனை மீண்டும், மீண்டும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இதனால் 65 வருடகால அரசியல் பாதையிலிருந்து வடக்கு மாகாணசபை பிறழ்ந்து போகாமலிருக்க இவர்கள் கவனமாக பார்த்துக் கொள்வார்கள். எனினும் இந்த இலங்கை தமிழர்சார் தமிழ், ஆங்கில ஊடகங்களும் வடக்கு மாகாணசபை தமிழ் குறுந்தேசியவாத பாதையிலிருந்து வழிதவறி போய்விடக்கூடாது என்பதில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றன.

இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழுவின் (2014ஆம் ஆண்டு மார்ச் மாதம்) ஜெனிவா அமர்வில், அமெரிக்கா கொண்டு வரவிருந்த தீர்மானத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்க வேண்டும், இத்தீர்மானத்தை ஆதரவளிக்கும் வகையில் வடக்கு மாகாணசபை தீர்மானம் நிறைவேற்ற வேண்டும், ஜெனிவா அமர்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் பங்கேற்க வேண்டுமென்ற கருத்தை பரவலாக்கி வெற்றி பெறச்செய்ததில் இந்த இலங்கை தமிழர்சார் தமிழ், ஆங்கில ஊடகங்களுக்கு முக்கிய பங்குள்ளது.

இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் என்பதற்காக அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரித்த அதேவேளையில், அத்தீர்மானம் வெறும் கண்துடைப்பு, மேற்கத்தைய நலன் சார்ந்தது (இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை தடுப்பது) அல்லது இலங்கையில் தமிழர்களுக்கென தனியரசொன்றினை உருவாக்குவதற்கு உதவப் போவதில்லை போன்ற பரப்புரைகளையும் இந்த ஊடகங்கள் முன்னெடுத்தன. இது மாகாணசபை முறையிலான தீர்வு தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க உதவாது, அதேநேரத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைகளின் அதிகாரங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே குந்தியிருக்க வேண்டும் போன்ற எண்ணக் கருத்தினை (இந்த இலங்கை தமிழர்சார் தமிழ், ஆங்கில ஊடகங்களே இதனையும் உருவாக்கியது) ஒத்தது.

இலங்கையில் வாழும் பெரும்பான்மையினரான சிங்கள இனத்தவர் பற்றியும் இலங்கை அரசு பற்றியும் இலங்கையை பூர்வீகமாக கொண்ட தமிழர்களில் கணிசமானவர்களிடையே ஒருமித்த கருத்தொன்று உள்ளது. "இனி ஒருபோதும் சிங்களவனோடு சேர்ந்து வாழ முடியாது" என்பதே அக்கருத்து. இந்த "நச்சு" கருத்தினை பெற்றெடுத்த "தாய்"க்கட்சிகள் இப்போது அழிந்தொழிந்து போனாலும் இதனை நிலை நிறுத்துவதில் "சுதந்திரன்"இலிருந்து இன்றைய பெரும்பாலான தமிழர்சார் அச்சு பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், இணையங்கள் வரை கச்சிதமாக செயற்பட்டு வருகின்றன.

(நன்றி: வானவில் இதழ் 39)

# வரலாற்றுப் பார்வையில் E = mc²

— வினவு —

7

1907ஆம் ஆண்டு ஆஸ்திரியாவைச் சேர்ந்த 28 வயதான யூதப் பெண் லிசா மைட்னர் கதிரியக்கத் துறையில் ஆய்வு மேற்கொள்வதற்காக பெர்லின் நகருக்கு வருகிறார். அன்றைய ஜேர்மனியில் பல்கலைக்கழகங்களும் ஆய்வு நிறுவனங்களும் பெண் ஆய்வாளர்களை பணிக்கமர்த்துவதில்லை.

ஜேர்மானிய இரசாயனவியலாளர் ஓட்டோ ஹான், லிசாவுக்கு உதவ முன்வருகிறார். கதிரியக்கம் பற்றிய தனது ஆய்வில் லிசாவை சககூட்டாளியாக சேர்த்துக் கொள்கிறார். 1912ல் அவ்விருவரும் கைசர் வில்ஹெல்ம் (Kaiser Wilhelm) ஆய்வு நிறுவனத்தில் இணைந்து பணியாற்றுகின்றனர். பல்கலைக் கழகத்தின் பிற பேராசிரியர்கள் லிசா மைட்னரை தொடர்ந்து புறக்கணித்து அவமதிக்கின்றனர். ஆனால் ஓட்டோ ஹானுடனான நட்பும் இயற்பியல் மீதான வேட்கையும் அவரை தாக்குப்பிடிக்க வைக்கிறது.

லிசா மைட்னர் ஜெர்மனியின் முதல் பெண் பேராசிரியராக நியமிக்கப்படுகிறார்.

1930களில் பருப்பொருளின் அடிப்படைத் துகளான அணுவின் அணுக்கரு புரோட்டன், நியூட்ரன் போன்ற துகள்களால் ஆனது என்பது கண்டறியப்பட்டிருந்தது. அந்த ஆண்டுகள் அணுக்கரு ஆய்வுகளின் பொற்காலமாக திகழ்ந்தன. அன்றைக்கு அறியப்பட்ட தனிமங்களில் மிகப்பெரிய உட்கருவைக் கொண்டிருந்த மூலகம் யுரேனியம். 238 புரோட்டன்களும் நியூட்ரன்களும் கொண்ட யுரேனியத்தின் உட்கருவுக்குள் நியூட்ரன்களை செலுத்தி புதிய மூலகங்களை உருவாக்கும் ஆய்வில் லிசாவும் ஓட்டோவும் ஈடுபட்டிருந்தனர். ஆய்வின் இரசாயனவியல் செயல்முறைகளை ஓட்டோவும், இயற்பியல் கோட்பாடுகளை லிசாவும் பங்களித்து வந்தனர்.


லிஸா மைட்னர்

1930 களில் ஆட்சிக்கு வந்த நாஜிக்கள், இன வெறி காரணமாக யூதர்களை அறிவுத்துறையில் இருந்து வெளியேற்றத் துவங்கினர். அதனால் 1933ஆல் ஐன்ஸ்டீன் நாட்டை விட்டு வெளியேறி-னார். தனது ஆய்வுகளில் தீவிரமாக இருந்த லிசாவுக்கு எதிராகவும் நாஜிக்கள் பிரசாரம் செய்ய ஆரம்பிக்கின்றனர். நாஜி எதிர்ப்பு கருத்துக்களை கொண்ட ஹான், லிசாவை பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்கிறார். ஆயினும், சூழ்நிலை மோசமடைந்து லிசா ஜேர்மனியில் தங்கியிருக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அவரைக் காப்பாற்ற பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் அறிவியல் அமைப்புகளிலிருந்தும் அறிவியல் உரையாற்ற அழைப்புகள் அனுப்பப்படுகின்றன. ஆனால், நாஜிக்கள் அவரை நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கவில்லை. ஓட்டோ ஹானும், லிசாவுக்கு சார்பான தனது போராட்டங்களை கைவிடுகிறார்.

1938ஆம் ஆண்டு சூழ்நிலை மிகவும் மோசமடைய, டச்சு நண்பர் ஒருவரின் உதவியுடன், தனது வாழ்நாள் முழுவதும் ஈட்டிய பொருட்கள், ஆய்வுப் பணிகள் அனைத்தையும் விட்டு விட்டு ஒரு பெட்டியுடன் அகதியாக ஒல்லாந்துக்கு தப்பிச் செல்கிறார் லிசா. பெர்லினில், நடந்து வரும் ஆய்வு விபரங்களை கடிதம் மூலம் பெற்று ஓட்டோ ஹானுக்கு தனது வழிகாட்டல்களை அளித்து வருகிறார்.


ஓட்டோ ஹான்

யுரேனியம் அணுக்கருவில் நியூட்ரனை உட்செலுத்திய சோதனையில் பேரியம் உருவாக்கப்படுவதாக ஓட்டோ ஹான் தகவல் அனுப்புகிறார். எதிர்பார்த்தபடி பெரிய மூலகத்தை உருவாக்காமல் சிறிய மூலகம் எப்படி உருவானது என்பதை ஓட்டோ ஹான் புரிந்து கொள்ள முடியவில்லை. லிசா, அதைப்பற்றி தனது மருமகனும் அறிவியலா-ளருமான ஒட்டோ றொபேர்ட் ஃபிரிட்சுடன் விவாதிக்கிறார். ஒரு பெரிய நீர்க் குமிழி எந்த நேரமும் உடைந்து சிதறும் நிலையில் இருப்பதைப் போல பெரிய உட்கருவான யுரேனியத்துக்குள் நியூட்ரனை செலுத்தும் போது, அது ஓட்டோ ஹான் மற்றும் பிற அறிவியலாளர்கள் நினைத்தது போல பெரிய மூலகத்தை உருவாக்காமல், சிறிய மூலகங்களாக உடைகிறது என்று லிசா உணர்கிறார்.

ஆனால், உட்கரு பிளவுபட்டால் இரண்டு பகுதிகளும் உயர் ஆற்றலுடன் (இரு அணுக் கருக்களுக்கிடையிலான எதிர்விசை சுமார் 200 மில்லியன் எலக்ட்ரோன் வோல்ட் இருக்க வேண்டும்) ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து விலக வேண்டும். அவ்வாற்றல் எங்கிருந்து பெறப்படுகிறது என்று இருவரும் ஹானின் ஆய்வு முடிவுகளை சரிபார்க்கிறார்கள். பிளக்கப்பட்ட அணுக்களின் நிறைகளின் கூட்டுத்தொகையானது யுரேனியம் அணுவின் நிறையை விட, புரோட்டனின் நிறையில் ஆறில் ஒரு பங்கு குறைவாக இருந்தது. அந்நிறையை ஐன்ஸ்டீனின் சமன்பாட்டில் பொருத்திப்பார்க்கும் போது அது கிடைக்கும் ஆற்றல் அவர்கள் பரிசீலிக்கும் அணுப்பிளவில் எதிர்பார்க்கும் அளவிலானது என்பதை லிசா மெய்ட்னர் கணக்கிடுகிறார்.

"அவர் (ஓட்டோ ஹான்) அணுவை பிளந்து விட்டார்" என்கிறார் லிசா. அவரது மருமகனோ, "இல்லை! இல்லை! நீங்கள் அணுக்கருவை பிளந்திருக்கிறீர்கள்!" என்கிறார்.

(தொடரும்)

# நைல் நதியை சேமிக்கும் நாடு!

– வ.மி.கோபு

கோதுமை பயிரிட எகிப்தை விட சிறந்த நாடுண்டோ நிலமுண்டோ? மாபெரும் வான் மழை பெய்யா நாட்டினில், தான் பொய்யா நைல் நதியின் பாசன நிலமல்லவா எகிப்து? சோழனும் வளவனோ? ஃபாரோ அன்று ஒப்பில்லா வளவன்? பல்லாயிரம் ஆண்டாக வண்டல் மண்ணை வள்ளலாய் தந்து ஓங்கு சென்னெல் பெருக வழங்கிய வற்றா நதி நைலுக்கும் ஒப்புளதோ, அதன் புகழுக்கு பரிசுளதோ?

என்னே நைல் பாயும் மண்ணின் பசுமை? என்கொல் அதன் செழுமை? ஏரிழுக்க வேண்டாம், ஏர்பூட்டும் எருது வேண்டாம், தூவி தெளித்த நெல்லை மிதித்து புதைக்க பன்றிக்கூட்டம் போதுமே உழவிற்கு. அறுவடை செய்த பின், நெல்லையும் உமியையும் மிதித்து பிரிக்கும் அதே பன்றிக்கூட்டங்களை அகமகிழ்ந்து புகழ்ந்து பாடாத புலவர் உண்டோ?

அக்கம்பக்கத்து நகரங்களுக்கும் அண்டை நாட்டு மக்களுக்கும் சோறூட்டும் நெற்களஞ்சியம் எகிப்து.

சரி அது இருக்கட்டும். யார் ஐயா போயும் போயும் எகிப்தில் கோதுமை பயிரிடுவான்? ஜனத்தொகை பெரிது, பெருகி வழிகிறது. மழையில்லா நிலம். பாலை சூழ்ந்த அளவான நஞ்சை. வெள்ளத்தை நம்பும் வேளாண்மை. குடிக்கவே நீருக்கு கவலை, இதில் உழவும் ஒரு கேடா? அதுவும் போயும் போயும் கோதுமை - தாகமுள்ள பயிர், பெரிதாய் விலை போகாத பயிர். தூரத் தூர நாடுகளிலிருந்து பெருங்கடல்களைத் தாண்டி அள்ளி பணங்கொடுத்து நெல்லை வாங்கும் நாடல்லவா எகிப்து? புலவன் கிடக்கிறான். வெண்டைக்காய். வாகனங்கள் ஓட நல்ல சாலை உண்டா, நெல் அரைக்க மில் எத்தனை?

நாடும் நதியும் ஒன்றே, நாளும் நிலைமையும் மாறிவிட்டன. காலத்தின் கோலத்தால், தொழில்நுட்ப பெருவளர்ச்சியால், வணிகத்தின் விரிதலால், இம்மாற்றங்கள் வந்துள்ளன. பன்றி மிதித்து உழுததும் உமி பிரித்ததும், கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்க வரலாற்று பிதாமகன் ஹெரடாடஸ் எழுதியது. மூவாயிர ஆண்டு ஃபாரோ ஆட்சியிலும் அலெக்ஸாண்டர் ஜூலியஸ் சீஸர் நிறுவிய கிரேக்க ரோமானிய ஆட்சியிலும், மெடிட்டரேனிய கடல் சூழ்ந்த நாடுகளுக்கு எகிப்தே பெரிய நெற்களஞ்சியம்.




பாய்மரக் கப்பலும், எருது இழுத்து ஏர் உழவும் கோலோச்சிய காலம்.

இன்றோ ருஷியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளிலிருந்து கப்பல்கள் நெல்சுமந்து எகிப்தில் இறக்குகின்றன. மக்கள் என்னவோ அதே ஃபாரோ காலத்து ரொட்டியை தான் சமைத்து உண்ணுகின்றனர்.

என்ன வேற்றுமை? மெடிட்டரேனிய நாடுகளில் எகிப்து நீர்வள நாடாக இருக்கலாம். ஆனால் உலக நாடுகளின் பட்டியலில் அதன் நீர்வளம் குறைவே. எகிப்திலிருந்து சீஸர் காலத்து ரோமாபுரி நெல் இறக்குமதி செய்ததுபோல் இன்று மற்ற நாடுகளிலிருந்து எகிப்து நெல் இறக்குமதி செய்கிறது. நெல்லை மட்டுமல்ல, நீரையும் இறக்குமதி செய்கிறது. எப்படி? கப்பலில் நீர் வரவில்லை. ஆனால் வாங்கும் நெல்லுக்கு பாய்ச்சிய நீர், நெல் வளர்த்த நாடுகளில் அல்லவா பாய்ந்தது? இப்படி தன்னுடைய நீரை சேமிக்கிறது எகிப்து.

சத்தமின்றி, யுத்தமின்றி, ஒப்பந்தமின்றி, உரத்தை மலிவாய் தரும் அரசின்றி, கொள்முதல் செய்யும் நெற்களஞ்சியசாலைகள் இன்றி, இதில் பங்கு திருடும் அரசியல்வாதியும் அதிகாரியும் தொழில் சங்கத்தலைவரும் இன்றி, வணிகத்தால் நெல் வளம் காண்கிறது எகிப்து.

# கு.ப.ரா.வின் இறுதி மணித்துளிகள்




முப்பத்திரண்டாம் வயதில் "காட்ராக்ட்" என்னும் நோயால் கு.ப.ரா.வின் கண்பார்வை பாதிக்கப்பட்டது. கண்நோய் காரணமாக அவர் தாலுகா அலுவலக கணக்கர் வேலையை விட்டு விலகி சிகிச்சைக்காக கும்பகோணம் சென்றார்.

"அந்த நிலையில்தான் ஓர் எழுத்தாளராக மலரும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. அந்தச்சமயம், ஒரு குறுகிய காலத்திற்காவது தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்திற்கு இலாபமாக அமைந்தது என்று நாம் துயர்கலந்த பெருமை கொள்ளலாம்!" என்கிறார் சிட்டி (இரட்டையர்களில் ஒருவன் சிறிது வெளிச்சம்") கண்பார்வைக் குறைவுற்ற நிலையிலேயே அவர் "மணிக்கொடி" போன்ற பத்திரிகைகளுக்கு கதைகளும் கட்டுரைகளும் எழுதினார். கண் பார்வை முழுதும் பாதிக்கப்பட்டிருந்த போதும் அவர் எழுதுவதை நிறுத்தவில்லை. அவர் சொல்லச் சொல்ல அவருடைய தங்கையான கு.ப.சேதுஅம்மாள் எழுதினார். இருவரும் சேர்ந்து இலக்கியப் பணியாற்றினர். கு.ப.ரா.வின் புகழ் பெற்ற சிறுகதையான "விடியுமா"? கு.ப.சேது அம்மாளின் வாழ்க்கையோடு தொடர்புடையதாகும். அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த அவல நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பின்னப்பட்டதாகும்.

1944ன் தொடக்கத்தில் கு.ப.ரா., துறையூருக்குச் சென்று "கிராம ஊழிய"னின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். அப்போது "கொங்கிரின்" என்னும் கொடிய நோய் அவருடைய கால்களைத் தாக்கியது. காலின் சதைகள் உயிரற்றுப் போய் முழங்காலுக்குக் கீழே இரண்டு கால்களையும் உடனடியாக எடுத்துவிட வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. இந்நிலையைக் கு.ப.ரா எதிர்கொண்ட விதம் குறித்தும் அவரது இறுதி மணித் துளிகள் குறித்தும் கரிச்சான் குஞ்சு எழுதுகிறார்:

"ஆம்ப்யுடேஷன்" செய்வதற்கு உரியவற்றை உடனே செய்யத் தொடங்கினார்கள். கு.ப.ரா. தடுத்துவிட்டார், நனைந்த கண்களுடன். "நான் விடைபெற்றுக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, "காவிரித்தீர்த்தம் ஒரு டம்ளர் வேண்டும்" என்றார். உடனே ஓடிப்போய் பக்கத்திலிருந்த தெருவிலிருந்து வாங்கி வந்தோம். கைநடுங்க வாங்கிக் குடித்தார் ஒருவாய்... அவ்வளவுதான்... துவள ஆரம்பித்தார். காரில் வீட்டுக்குக் கொண்டுவந்தோம். வீட்டிற்குள் போவதற்குள் உயிர் பிரிந்து விட்டது."

(இரா.மோகனின் 'கு.ப.ராஜகோபாலன்' நூலிலிருந்து.)



# தொல்லைக் காட்சி!

அமெரிக்காவின் மசாசூஸெட்ஸ் மாகாணத்தில் உள்ள "மாஸ் ஜெனரல் ஹொஸ்பிற்றல் ஃபோர் சில்ட்ரன்" மருத்துவமனையும் ஹார்வேர்ட் ஸ்கூல் ஒஃப் பப்ளிக் ஹெல்த்தும் இணைந்து ஓர் ஆய்வை நடாத்தின.


ஆறு மாதத்திலிருந்து எட்டு வயதுக் குழந்தைகள் வரை 1800 குழந்தைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

தொலைக்காட்சி பார்ப்பதால் இந்தக் குழந்தைகளுக்குப் பாதிப்பு ஏதாவது இருக்கிறதா? என்று கண்டறிவதே ஆய்வின் நோக்கம்.

தொலைக்காட்சி பார்ப்பதால் குழந்தைகளின் தூக்கம் கெட்டுப் போகிறது. ஆழ்ந்த தூக்கம் இல்லாததால் குழந்தைகளின் உடல், மன வளர்ச்சியில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனவே குழந்தைகளை தொலைக்காட்சி பார்க்கவிடாதீர்கள் என்கிறார்கள் ஆய்வாளர்கள். படுக்கையறையில் தொலைக்காட்சி இருந்தால் அதை வேறு இடத்துக்கு மாற்றச் சொல்கிறார்கள்.

நமது குழந்தைகளுக்கும் இது பின்பற்றப்பட வேண்டியதுதான்!

# மறக்க முடியாத பாடல்கள் தந்த கவிஞர் முத்துலிங்கம்...



"வெண்ணிலா" என்ற பெயரில் என் முதல் கவிதைத் தொகுதியை 1961இல் வெளியிட்டேன். பாவேந்தர் பாரதிதாசன் வாழ்த்துரையுடன் வெளிவந்த முதல் கவிதைத் தொகுதி என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டேன்.

1966 முதல் 72 வரை "முரசொலி"யில் துணை ஆசிரியர் குழுவில் பணிபுரிந்தேன். பிறகு வேலூர் நாராயணன் நடாத்திய "அலை ஓசை" பத்திரிகையில் சேர்ந்தேன். அந்தநேரம் "பொண்ணுக்குத் தங்க மனசு" படத்தில் பாடல் எழுதும் வாய்ப்பு கிடைத்தது.

"தஞ்சாவூரு சீமையிலே - கண்ணு
தாவி வந்தேன் பொன்னியம்மா"

என்ற பாடலை எழுதினேன். அந்தப் படத்தின் இசையமைப்பாளர் ஜி.கே. வெங்கடேஷ் என்றாலும் நான் எழுதிய பாடலுக்கு இசையமைத்தவர் வெங்கடேஷின் உதவியாளராக இருந்த இளையராஜா. அந்த வகையில் முதன்முதலாக இளையராஜா இசையில் பாடல் எழுதிய பெருமை எனக்கு உண்டு.

1974ஆம் ஆண்டில் ஒரு நாள் எம்.ஜி.ஆரைச் சந்திக்க, பாண்டிபஜாரில் இருந்த அவர் அலுவலகத்துக்குச் சென்றேன். நான் வந்திருப்பது அறிந்து தன் உதவியாளரிடம் ஆயிரம் ரூபாய் கொடுத்தனுப்பினார். "பணம் வேண்டாம் தலைவரே... அதற்குப் பதில் வேலை கொடுங்கள். அது போதும்" என்றேன். பிறகு முதன்முதலாக "உழைக்கும் கரங்கள்" படத்தில் பாடல் எழுத வாய்ப்புத் தந்தார்.

"கந்தனுக்கு மாலையிட்டாள்
கானகத்து வள்ளிமயில்
கல்யாணக் கோலத்திலே
கவிதை சொன்னாள் காதல் குயில்"


என்ற அந்த முதல் பாடல் வாணிஜெயராம் குரலில் பதிவானது.

"ஊருக்கு உழைப்பவன்" படத்தில், "பிள்ளைத்தமிழ் பாடுகிறேன்... ஒரு பிள்ளைக்காகப் பாடுகிறேன்" என்ற பாடல் இரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. அதைப்போன்று "இன்றுபோல் என்றும் வாழ்க" படத்தில் "அன்புக்கு நான் அடிமை, தமிழ்ப் பண்புக்கு நான் அடிமை, நல்ல கொள்கைக்கு நான் அடிமை, தொண்டர் கூட்டத்தில் நான் அடிமை" என்ற பாடலை எழுதினேன். அதுதவிர, "இது நாட்டைக் காக்கும் கை - உன் வீட்டைக் காக்கும் கை" என்ற பாடலையும் எழுதினேன். 1977இல் நடந்த பொதுத் தேர்தலில் இவற்றைப் பிரசாரப் பாடல்களாக எம்.ஜி.ஆர். பயன்படுத்தினார்.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் "வாஷிங்டன் போஸ்ட்" என்ற பத்திரிகை இந்தப் பாடல்களைப் பாராட்டி செய்தி வெளியிட்டிருந்தது. "மீனவ நண்பன்" படத்தில் "தங்கத்தில் முகமெடுத்து" பாடலும் "மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்" படத்தில் "தாயகத்தின் சுதந்திரமே எங்கள் கொள்கை" என்ற பாடலும் மறக்க முடியாதவை.

"மாஞ்சோலை கிளிதானோ, மான்தானோ" (கிழக்கே போகும் ரயில்), "காஞ்சிப் பட்டுடுத்தி, கஸ்தூரி பொட்டு வைத்து" (வயசுப் பொண்ணு) - இப்படி ஆயிரக்கணக்கான பாடல்களை எழுதி "கலைமாமணி" முதல் "கலை வித்தகர்" வரை பல விருதுகளையும் பெற்றுள்ளேன். ஆனால், எனக்குத் தனிப்பட்ட ஒரு கருத்து உண்டு. தமிழக அரசு பாரதியார், பாரதிதாசன், உ.வே.சா. பெயர்களில் விருதுகளை அறிஞர்களுக்கு வழங்குகிறது. ஆனால், இளங்கோ அடிகளார் பெயரில் இதுவரை விருது வழங்கப்படவில்லை.

தமிழில் முதல் காப்பியம் படைத்தவர் அதையும் குடிமக்கள் காப்பியமாக, முத்தமிழ்க் காப்பியமாகப் படைத்தவர். அவர் குறிப்பிட்டுள்ள நாடக மேடை அமைப்பு, இசைத் தமிழ் விளக்கம், ஆடற்கலைச் சிறப்பு இவையெல்லாம் இன்றைக்கும் நமக்கு வியப்பூட்டுபவையாகவே இருக்கின்றன. அப்படிப்பட்ட பெருமைக்குரியவர் பெயரில் ஒரு விருது இன்னும் வழங்கப்படவில்லையே என்பதுதான் என் ஆதங்கம்.



வவுனியா ஓமந்தை சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் சித்திரைப் புத்தாண்டு சேமிப்பு வாரத்தினை முன்னிட்டு அங்கத்தவர்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியும் பரிசு குலுக்கலும் கடந்த திங்கட்கிழமை ஓமந்தை சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் இடம்பெற்றது. வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமுர்த்தி வங்கிச்சங்கத்தின் உத்தியோகத்தர் ஒருவர் மங்கள விளக்கேற்றுவதையும் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், சேமிப்பில் ஈடுபட்டவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படுவதையும் உத்தியோகத்தர்களுக்கு செய்த வேலையை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கபடுவதையும் காணலாம். (70)

# காணிப் பிணக்கால் இடைநிறுத்தப்பட்ட வீட்டுத்திட்டங்கள் இரத்தினபுரத்தில் ஆரம்பம்



கிளிநொச்சி இரத்தினபுரத்தில் காணிப்பிணக்கு காரணமாக இடைநிறுத்தப்பட்ட வீட்டுத்திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இரத்தினபுரம் பகுதியில் இந்திய வீட்டுத்திட்டத்திற்கமைவாக சுமார் 124 வீடுகளை அமைக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகின்ற நிலையில் அப்பகுதியில் சுமார் 49 வரையான குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. குறித்த 49 குடும்பங்களும் அரச ஒதுக்கீட்டுக்காணிகளில் குடியிருந்தார்கள் என்ற நோக்கின் அடிப்படையிலேயே வீட்டுத் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டது.

இவ்விடயம் மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் அந்தமக்கள கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக அக்காணிகளில் வாழ்ந்து வருகின்ற நிலையில் அவர்களுக்கு அங்கேயே இருப்பிடங்கள் அமைப்பதற்குரிய காணிகள் வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கைக்கமைவாக குறித்த காணிகளை நில அளவைத் திணைக்களத்தினூடாக அளவீடு செய்து நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கால்வாய்க்குத் தேவையான பகுதியை உரிய பொறியியலாளர்களின் கோரிக்கைக்கேற்ப ஒதுக்கீடு செய்து வழங்கினார். ஏனைய காணிகளில் மக்கள் வீடுகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளையும் அரச நிர்வாக விதிமுறைகளுக்கமைவாக மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை திருவையாறு வில்சன் வீதிப் பகுதியிலும் சில குடும்பங்கள் எதிர்கொண்ட காணிப்பிணக்குகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினரால் உரிய முறைப்படி தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

இதன்போது வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் சுதாகரன், நீர்ப்பாசனப் பொறியியலாளர் விகிர்தன், கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலர் சிவகுமார் மற்றும் நில அளவைத் திணைக்களத்தின் அதிகாரிகள், கரைச்சிப் பிரதேச செயலகத்தின் குடியேற்ற உத்தியோகத்தர் குறித்த கிராமங்களின் கிராம அபிவிருத் திச்சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## பராமரிப்பு பணிகளுக்காக மின்விநியோகம் தடை

எதிர்வரும் புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை குடத்தனை, நடுக்குடத்தனை,பொற்பதி, குடத்தனை வடக்கு கடற்கரைப் பகுதி, மணற்காடு சந்தி, மணற்காடு வடக்கு, அம்பன், வலிக்கண்டி, நாகர்கோவில் ஆகிய இடங்களிலும் 10.05.2014 சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மல்லாகம் கட்டுவன் வீதி, ஏழாலை, மயிலங்காடு வீதி, விழிசிட்டி, உத்தமன்சிலையடி, மிருசுவில், எழுதுமட்டுவாழ், உசன், விடத்தற்பளை, கெற்பலி, ஆசைப் பிள்ளைஏற்றத்தடி, படித்த மகளிர்குடியேற்றத்திட்டம் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்படும்.

11.05.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை ஸ்ரீலங்கா ரெலிகொம், பிரதம தபாலகம், நீதிமன்ற வளாகப் பிரதேசம், பண்ணைப் பிரதேசம், யாழ் நூலகம், சத்திரச் சந்தியில் ஒரு பகுதி, வேம்படி 1ஆம் குறுக்கு, யாழ் பிரதான வீதி ஒரு பகுதி, 2ஆம் 3ஆம் குறுக்கு விஜிதா கபே சிறைச்சாலைப் பிரதேசம், கஸ்தூரியார் வீதியின் ஒருப்குதி, மணிக்கூட்டு வீதி கன்னாதிட்டி சந்தி வரை, மின்சார நிலைய வீதியின் ஒரு பகுதி, தலங்காவில், பலாலி வீதி, கந்தர்மடம், ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், இராசாவின் தோட்டம், ஆனைப்பந்தி சந்தி, இலுப்பையடி சந்தி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, மணிக்கூட்டுக கோபுர வீதிகளின் ஒரு பகுதி, பரமேஸ்வரா சந்தி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்படும் என யாழ். பிராந்திய மின பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## வலி. தென்மேற்கு மக்களின் மாபெரும் சந்திப்பு மானிப்பாயில்

வலி. தென்மேற்கில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவு மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க மானிப்பாயில் மாபெரும் மக்கள் சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்புக்கு பிரதம அதிதியாக ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவரும் வலி. தென்மேற்கு பிரதேச ஒழுங்கிணைப்புக் குழுத்தலைவருமான முருகேசு சந்திரகுமார் கலந்துகொள்வார்.

இதற்கான ஏற்பாடுகளை வலி. தென்மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் வெ.அ.ஜோன்சன் மற்றும் வலிகாமம் ஈ.பி.டி.பி. இணைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) ஆகியோர் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

வலி. தென்மேற்கு மக்கள் சந்திப்பின்போது 28 கிராம அலுவலர் பிரிவில் உள்ள மக்கள் பொது அமைப்புக்கள் மற்றும் ஓய்வூதிய பிரச்சினை, வீட்டுத்திட்டம், காணிப்பிரச்சனை மற்றும் உட்கட்டுமாண அபிவிருத்தி மற்றும் ஏனைய சேவைகளை பெறவிரும்பும் அனைத்து மக்களும் கலந்து கொள்ளலாம் என எதிர்க்கட்சித்தலைவர் வெ. அ. ஜோன்சன் அறிவித்துள்ளார். (92)

## பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(சாவகச்சேரி)

பொலிஸ் உபபரிசோதகர் (பெண்)மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ளவர்கள் விண்ணப்பங்களை அனுப்புமாறு சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மல்லவராய்ச்சி தெரிவித்தார்.

18முதல் 25 வயதிற்குட்பட்ட 5 அடி 4 அங்குல தோற்றம் கொண்ட க.பொ.த (சா/த) கணிதம், தாய்மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்திபெற்று 6 பாடங்களில் சித்தியெய்தியவர்கள் பெண் பொலிஸ் பதவிக்கும் க.பொ.த உயர் தரத்தில் ஒரே தடவையில் 3 சித்திகளைப் பெற்றவர்கள் பெண் பொலிஸ் உபபரிசோதகர் பதவிக்கும் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை பணிப்பாளர் பொலிஸ் ஆட்சேர்ப்பு பிரிவு இல 375, ஸ்ரீ சம்புத்தத்துவ மாவத்தை,கொழும்பு-6 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் மேலதிக விபரங்களை 11.04.2014 திகதியில அரச வர்த்தமானியில் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.(11)

## மங்கையற்கரசி வித்தியாலயத்தின் க.பொ.த (சா/த) பெறுபேறுகள்

நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய 21 மாணவர்களில் 8 பேர் திறமைச் சித்தி பெறறுள்ளதாக பாடசாலை அதிபர் மகேசன் கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர்களின் விபரம் வருமாறு:- சினேகா தவனேஸ்வரன் 2A,B, 3C,3S, மகேந்திரராஜா சிந்துஜன் A,2B,3C,2S, ரவிக்குமார் சர்மிலன் A,2B,3C,S, கஜேந்தினி மகேஸ்பாலா A,B 4C,2S, சர்மினி மகேஸ்வரன் A,B,2C,4C,S அங்கமுத்து சதீஸ்குமார் A,3C, 4S, சடாயினி திருச்செல்வம் A,3C, 3S, சிவகுமார். டினோஜன் B,4C, 3S;

## முத்தமிழ் முன்பள்ளியில் பொருட்கள் கொள்ளை

நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியில் கடந்த வியாழக்கிழமை முனபள்ளியின் கற்றல் உபகரணங்களும் பணமும் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி முன்பள்ளியில் இனநதெரியாத விசமிகளால் கடந்த வியாழக்கிழமை 10,000 ரூபா பணமும் கற்றல் உபகரணங்களுமாக மொத்தம் 40,000 ரூபா பெறுமதியான பொருட்களே களவாடப்பட்டுள்ளதாக முன்பள்ளியின் பொறுப்பாசிரியர் சண்முகலிங்கம் சியாமளாதேவி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கோபபாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இராணுவத்தின் சிவில் பாதுகாப்புப்படையும் முன்பள்ளியைப்பார்வையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எஸ்.பி)

## அவசர கூட்டம்


(வடமராட்சி)

வடமராட்சி லயன்ஸ் கழக அங்கத்தவர்களுக்கான அவரச கூட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு லயன் எஸ். தங்கராஜா தலைமையில் நெல்லிடிய செவிப்புலனற்றோர் நிலையத்தில் நடைபெறவுள்ளதாக செயலாளர் கி. முரளிகரன் அறிவித்துள்ளார்.

அவசரமான சில முக்கியமான தீர்மானங்கள் இக்கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. 109)

# உட்கட்சிப் பூசலால் திணறுகிறது கூட்டமைப்பு

## பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவர்



மாகாணசபை தேர்தல் காலத்தில் சர்வதேசம் அரசியல் தீர்வைப் பெற்றுத் தரும் எனவே எமக்கு வாக்களியுங்கள் என மக்களை ஏமாற்றி வாக்குகளை அபகரித்த கூட்டமைப்பினர், குழு, கோஷ்டி என உட்கட்சிப் பூசலால் திணறிப்போயுள்ள நிலையில் தமிழர்கள் பிரச்சினையை ஆராய எட்டுப்பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளதாகத் தெரிவித்து மறுபடியும் மக்களை ஏமாற்றத் துணிந்துள்ளது. இவ்வாறு பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி இணைப்பாளருமான ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவிதது்ள்ளார்.

உலக உழைப்பாளர் தினமான கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை நகர கொட்டடி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சபாரட்ணம் சுகிர்தராஜா தலைமையில் இடம்பெற்ற சங்கத்தின் மாதாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறு சங்கத்தின் மாதாந்த பொதுச்சபைக் கூட்டத்தைக் கூட்டி அங்கத்தவர்களின் கருத்துக்களைப் பெற்றுத் திட்டங்களை வகுத்துச் செயற்படுவதன் ஊடாக சங்க அங்கத்தவர்களின் பொருளாதார நிலையை உயர்த்த சந்தர்ப்பங்களும் அத்துடன் அவர்களின் தொழில் ரீதியாக • எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் காண முடியுமென நம்புகின்றேன்.

கடந்த 2001ஆம் ஆண்டு எமது கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இச்சங்கத்தின் கட்டடத்திற்கான நிதியை வழங்கியிருந்தார். அதற்கான அடிக்கல்லையும் அன்று நானே நாட்டி வைத்தேன். அது இன்று இச்சங்கத்தின் முழுமையான சொத்தாகியுள்ளது. எமக்கு அதிகாரங்களும் வாய்ப்புக்களும் கிடைத்த சந்தர்ப்பங்களை மக்களின் நலன்களுக்காகவே பயன்படுத்தினோம். ஆனால் தற்போது வடக்கு மாகாணசபை அதிகாரத்தில் உள்ள கூட்டமைப்பினர் வாக்களித்த மக்களுக்கு கடந்த ஆறுமாத காலத்தில் எதனைச் செய்தார்கள்? தமிழர்கள் பிரச்சினையை ஆராய எட்டுப்பேர் கொண்ட குழுவை அமைத்ததாகக் கூறி மீண்டும் மக்களை ஏமாற்றத் துணிந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கரையோர இணைப்பாளர் பிரான்சிஸ் ரெட்ணகுமார் வடமராட்சி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வைத்திப்பிள்ளை அருள்தாஸ் ஆகியோர் கலந்து கொண்டார்.

# கோண்டாவிலில் புகையிலை திருட்டு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஞானவைரவர் கோவிலுக்கு அருகில் உள்ள வீட்டின் வளவில் வைக்கப்பட்டிருந்த புகையிலைக்குவியல் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

17820 ரூபா பெறுமதியான புகையிலையே திருட்டுப்போயுள்ளதாகவும் இது தொடர்பாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் உடனடி நடவடிக்கையினை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் வவுனியாவைச்சேர்ந்த தியாகராஜா சிறிரங்கராஜா என்பவரைக் கைது செய்து பின்னர் புகையிலையையும் மீட்டுள்ளனர். சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டதால் எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் நீதிபதியின் பணிப்பின் பேரில் புகையிலை உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# தமிழ்த்தின போட்டி யாழ். கோட்ட மட்ட முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கோட்ட மட்ட தமிழ்மொழித்தின போட்டி முடிவுகள் கோட்டக்கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

பிரிவு 5

செ.ஜஸ்ரினா (யா/திருக்குடும்பக்கன்னியர் மடம்),

**இசையும் அசைவும் பிரிவு 1**

வி.சதுர்த்திகா (யா/சென் ஜோண் பொஸ்கோ வித்தி), ஆ.அபிஷாலினி (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சு.சுஜானா (யா/நாவாந்துறை றோ.க.வித்தி

**இசை - தனி பிரிவு 1**

கு.தயாளரூபினி (யா/வேம்படி மகளிர் உ.த.பாடசாலை), சு.விதுர்சனா (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சி.திருமேனன் (யா/யாழ் மத்திய கல்லூரி),

பிரிவு 2

இ.லதாங்கி (யா/வேம்படி மகளிர் உ.த.பாடசாலை), த.கிருஸ்ணசுகி (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி), யூ.அனிதா (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

பிரிவு 3

ந.மதுராங்கணி (யா/வேம்படி மகளிர் உ.த. பாடசாலை), ப.அஜித் (யா/யாழ் மத்திய கல்லூரி); கு.மெலிற்றன் (யா/சென் ஜோனஸ கல்லூரி),

பிரிவு 4

த.கிரிதரன் (யா/சென் ஜோண்ஸ் கல்லூரி), செ.சஞ்சிகா (யா/வேம்படி மகளிர் உ.த.பாடசாலை), மு.ஆரணி (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

**இசை-குழு 1**

(யா/வேம்படி மகளிர் உ.த.பாடசாலை), (யா/நாவாந்துறை றோ.க.வித்தி), (யா/கொட்டடி நமசிவாய வித்தி)

**இசை-குழு 11**

(யா/வேம்படி மகளிர் உ.த.பாடசாலை), (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

**நடனம்-தனி-2**

சு.யதுர்ஷிகா (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), தரங்கினி (யா/வேம்படி மகளிர் உ.த.பாடசாலை), த.கீர்த்திகா (யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை)

**நடனம்-தனி- 3**

உ.மதுஷா (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), அ.மதுஷா (யா/திருக்குடும்பகன்னியர்மடம்), அ.சுபைரா (யா/நாவாந்துறை றோ.க.வித்தி)

**நடனம்-தனி -4**

அ.அபிலஷா (யா/வேம்படி மகளிர் உ.த.பாடசாலை), செ.நிதுஷா (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), வி.விதுஷாளினி (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)

(தொடரும்)

# பதிவிறக்கப் பெட்டகம்

வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர், மாணவன் ஒருவன் தூங்குவதைப் பார்த்தார்.

**ஆசிரியர்:** உன் பக்கத்தில் தூங்குறவனை எழுப்பு.

**மாணவன்:** நீங்கள் தூங்க வைப்பீங்கள். நான் எழுப்பணுமா? நீங்களே எழுப்பிக்கொள்ளுங்கள்.

*** *** *** ***

**ஆசிரியர்:** டேய் பாபு, நீ பஸ் பயணம் சென்ற அனுபவம் பற்றி எழுதியிருக்கிற கட்டுரையைப் பார்த்தால், சோமு எழுதிய மாதிரியே இருக்கே?

**பாபு:** நானும் சோமுவும் ஒரே பஸ்லதான் சேர் போனோம்...

*** *** *** ***

**ஆசிரியர்:** ஒரு செல் உயிரி எது என்று கேட்டால் மனிதர்கள் என்கிறாயே, ஏன்..?

**மாணவன்:** கையில் ஒரு செல் [போன்] கூட இல்லாத மனிதர்கள் யார் இருக்கிறார்கள்... அதனால்தான்..!

*** *** *** ***

**ஆசிரியர்:** இரு செல் உயிரிக்கு உதாரணம் சொல்லு பார்ப்போம்..?

**மாணவன்:** என் அப்பா... அவர்தான் இரண்டு செல் [போன்] வைச்சிருக்கிறாரே..!

*** *** *** ***

**ஆசிரியர்:** உங்களுடைய மகன் கொஞ்சம் இடக்குமடக்கான ஆளாத்தான் இருக்கிறான்...

**அப்பா:** ஏன் சேர்?

**ஆசிரியர்:** வருஷப் பிறப்பு வரும்போது ஏன் வருஷ இறப்பு வரவில்லை என்று கேட்கிறான்...!

*** *** *** ***

**ஆசிரியர்:** ஒரு நாளைக்கு இவ்வளவு தப்பு பண்ணுறியே..! எப்பிடியடா உன்னால் முடியுது?

**மாணவன்:** காலையிலே வெள்ளெனவே எழுந்திடுவேன் சேர்...!

**ஆசிரியர்:** !!!!!

*** *** *** ***

**ஆசிரியர்:** என்னடா, கதிரை மேலே நின்றுகொண்டு முணு முணுப்பு..?

**மாணவன்:** எப்ப பார்த்தாலும் என்னை கதிரை மேலே ஏறி நிக்கச் சொல்றீங்கள்... "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்'–என்று திருவள்ளுவர் சொன்னதை கொஞ்சம் நினைச்சுப் பாருங்க சேர்...

*** *** *** ***

**ஆசிரியர்:** உன்னைவிட சின்னவனான அவனை ஏன்ரா அழச்சனீ..? கையை நீட்டு...

**மாணவன்:** அதே தப்பைத்தான் சேர் நீங்களும் செய்றீங்கள்...

*** *** *** ***

**ஆசிரியர்:** உண்ணாவிரதத்துக்கும் மௌனவிரதத்துக்கும் என்ன வித்தியாசம்?

**மாணவன்:** சேர், நீங்கள் உண்ணாவிரதம் இருந்தால் உங்கள் உடம்புக்கு நல்லது... மௌனவிரதம் இருந்தால் எங்களுக்கு நல்லது.

*** *** *** ***

**ஆசிரியர்:** கதிரை மேல் நிற்க வைத்த பிறகும் அவனுக்குப் புத்தி வரவில்லையே... என்னடா சொல்றான் அங்கே...?

**மாணவன்:** இல்லை சேர்... போன ஜென்மத்திலே அவன் வாத்தியாராகவும் நீங்கள் மாணவனாகவும் இருந்தபோது உங்களை கதிரை மேல் நிற்க வைச்சதுக்கு இப்போ பழி தீர்த்துக்கொள்கிறீங்கள் என்று சொல்றான் சேர்...

*** *** *** ***

**ஆசிரியர்:** என்னடா, பரீட்சை எழுத வந்திட்டுத் தூங்குறாய்..?

**மாணவன்:** "கேள்விக்குப் பதில் தெரியவில்லை என்றால் சும்மா முழிச்சுக்கொண்டு இருக்காதே' என்று அப்பா சொன்னார் சேர்...

*** *** *** ***

**மாணவன்:** சேர், எனக்கு தொடர்ந்து சைபர் மார்க்கே போட்டுக்கொண்டு வர்றீங்கள், இது நல்லாயில்லை...

**ஆசிரியர்:** ஒஹோ!.... என்ன பண்ணுவீங்களாம்?

**மாணவன்:** சைபர் கிரைம் பிராஞ்சுக்கு கம்ப்ளெயின்ட் பண்ணுவேன் சேர்...

*** *** *** ***

**ஆசிரியர்:** எவன் ஒருவனால் ஒரு விசயத்தை மற்றவர்களுக்கு புரிய வைக்க முடியவில்லையோ அவன் ஒரு முட்டாள்...

**மாணவர்கள்:** புரியவில்லை சேர்...

*** *** *** ***

**ஆசிரியர்:** ஏன்ரா இவ்வளவு வெள்ளென மணியைப் போய் அடிச்சாய்..?

**மாணவன்:** பிள்ளைகள் எல்லோரும் சந்தோஷப்படுற மாதிரி ஏதாவது செய் என்று ரீச்சர்தான் சொன்னாங்கள், சேர்...

# அம்பனை அலுமினிய தொழிற்சாலை நடவடிக்கைகள் மேம்படுத்தல்



வலி.வடக்கு தெல்லிப்பளை அம்பனைப் பகுதியிலுள்ள தனியார் அலுமினிய தொழிற்சாலையின் தொழிற்துறை நடவடிக்கைகளை கைத்தொழில் அபிவிருத்தி சபையூடாக மேம்படுத்துவது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.


யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. யுத்தகாலத்தின் போது பகுதியளவில் சேத மடைந்த மேற்படி தொழிற்சாலை யானது தற்போது மீளவும் இயங் கத் தொடங்கியுள்ள நிலையில் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் தொடர்பில் அதன் உரிமையாளர்களால் அமைச்சரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்ட அமைச்சர், குறித்த தொழிற்சாலையின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு இலகுகடன் அடிப்படையில் வங்கிகளின் ஊடாக கடன்களைப் பெற்றுக் கொடுப்பதுடன் அதனூடாக இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது, ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா, வலி.வடக்கு பிரதேச செயலர் சிறிமோகனன், கைத்தொழில் அபிவிருத்தி சபை பிரதிப் பணிப்பாளர் சிவகெங்காதரன் ஆகியோருடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் மற்றும் இலங்கை வங்கியின் பிரதிநிதிகளும் உடனிருந்தனர்.

எலிமன் மெற்றல் அன்ட் அலுமினியம் வேக்ஸ் என்ற மேறபடி தனியார் தொழிற்சாலைக்கு அமைச்சர் விஜயம் மேற்கொண்டு தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பனைசார் தொழில்துறை வல்லுநர் மாநாடு தொடர்பில் ஆராய்வு



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பனை அபிவிருத்தி சபை மற்றும் யாழ்.மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

மேற்படி சந்திப்பு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது பனைசார் தொழிற்துறையை எதிர்காலத்தில் மென்மேலும் வளர்த்தெடுக்கும் முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், பனைசார் தொழில் வல்லுனர்களின் தொழிற்துறை நடவடிக்கைகளை நவீனமுறையில் முன்னெடுப்பது தொடர்பில் யூன்மாதம் நடைபெறவுள்ள மாநாடு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இதன்போது பனை அபிவிருத்தி பொதுமுகாமையாளர் லோகநாதன் உடனிருந்தார்.

# ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

(வடமராட்சி)

பொலிகண்டி குழந்தையேசு ஆலயத்தினரால் அண்மையில் நடாத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளை வீடியோ எடுப்பதற்கு உள்ளூர் படப்பிடிப்பாளர்களுக்கு அனுமதியளிக்கப்பட்ட போதிலும் ஊடகவியலாளர்களுக்கு வீடியோ மற்றும் படங்கள் தரவுகள் எடுப்பதற்கு மறுக்கப்பட்டதுடன் தகாதவார்த்தைப் பிரயோகங்களும் கொட்டி தீர்க்கப்பட்டன.

மேற்படி தேவாலயத்தில் உயிர்ப்பு ஞாயிறு இரண்டாம் வாரமான கடந்த 27 ஆம் திகதி அன்று பொலிகண்டி குழந்தையேசு இளைஞர் மன்றத்தினரால் தமிழர்களின் பாரம்பரியங்களை பறைசாற்றும் விளையாட்டு நிகழ்வுகள், முழுநாள் நிகழ்வாக தேவாலய பங்குத்தந்தை மேற்பார்வையில் நடைபெற்றது.

இந்நிகழ்வை வீடியோ, புகைப்படம் மற்றும் தரவுகளை சேகரிப்பதற்காக ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். இதில் ஊடகவியலாளர்கள் வீடியோ மற்றும் தரவுகள் சேகரிப்பதற்கு முட்டுக்கட்டைபோடப்பட்டிருந்தது. இது குறித்து ஊடகவியலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (116)

# வந்தாறுமூலை பல்கலைவளாக கல்விநடவடிக்கைகள் இடைநிறுத்தம்

கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தின் அனைத்து கல்விசார் நடவடிக்கைகளும் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டிருப்பதாக கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா நேற்று முன்தினம் மாலை அறிவித்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் தொடர்சியாக மேற்கொண்டு வரும் குழப்பங்கள் காரணமாக இந்த நிலைமை தோன்றியுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி முதல் மாணவர்களால் மேற்கொள்ளப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்ற நிலையில் இந்த அறிவித்தல் வெளியாகிறது.

நேற்றுமுன்தினம் மாலை கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜாவால் வெளியிடப்பட்ட அறிவித்தலில் கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தின் அனைத்து கல்விசார் நடவடிக்கைகளும் மறுஅறிவித்தல் வரும் வரையில் இடைநிறுத்தப்படுவதாகவும், பல்கலைக்கழக விடுதியில் தங்கியுள்ள அனைத்து மாணவர்களும் தங்களது விடுதிகளிலிருந்து வெளியேறிவிட வேண்டும்.

இதேவேளை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு சுகாதார விஞ்ஞான பராமரிப்புப் பீடம், திருகோணமலை வளாகம், கல்லடி சுவாமி விபுலானந்த இசை நடனக் கற்கைகள் நிறுவகம் ஆகியவற்றின் அனைத்துக் கற்கைகளும் தங்கு தடையின்றி இடம்பெறும் என்றும் உபவேந்தரின் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கல்வி வெளியீட்டுத்திணைக்கள புத்தக கண்காட்சியும் விற்பனையும்

கல்வி அமைச்சின் வெளியீட்டுத் திணைக்களம் ஏற்பாடு செய்த கல்விக் கண்காட்சியும் புத்தக விற்பனையும் நேற்று முன்தினம் ஆரம்பமானது

சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பவுசி, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, தொழில் அமைச்சர் காமினி லொக்குகே, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத், நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, பரீட்சை ஆணையாளர் டப்.எம்.என்.ஜே.புஷ்பகுமார, வெளியீட்டு ஆணையாளர் திஸ்ஸ ஹேவாவிதாரண ஆகியோரும் இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 11 ஆம் திகதி வரை இக்கண்காட்சி இடம் பெறவுள்ளது. இசுருபாய பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி அமைச்சில் இடம்பெறும் இக்கல்விக் கண்காட்சியும் புத்தக விற்பனையும் காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை இடம்பெறும்

அதேவேளை பாட ரீதியான புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், வினா விடை புத்தகங்கள், மாதிரி வினா விடை



பத்திரங்கள், ஆசிரியர் கை நூல்கள், வழிகாட்டல் நூல்கள், வெளிநாட்டு, உள்நாட்டு புத்தகங்கள் மற்றும் நாவல்களும் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

# வறட்சிக் கால தொழில்நுட்ப செயலமர்வு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தின் விவசாயத் திணைக்கள மண்டபத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் வறட்சியான காலங்களில் கடைப்பிடிக்கக் கூடிய நவீன தொழில் நுட்பங்கள் சம்பந்தமான செயலமர்வு வட மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத் தலைவர் பேராசியர் திருமதி. எஸ்.சிவச்சந்திரனும் கலந்து கொண்டனர்.

மங்கள விளக்கினை பிரதம விருந்தினர் ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினர் திருமதி சிவச்சந்திரன், விவசாய பணிப்பாளர் சிவகுமார், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஜெயசீலன் விவசாய ஆராய்ச்சி மேலதிகப்பணிப்பாளர் அரச கேசரி ஆகியோர் ஏற்றினார்கள்.

இச் செயலமர்வில் யாழ் மாவட்ட விவசாயிகளின் பிரதிநிதிகள், அரச திணைக்களங்களின் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள். (63)

# ஞாபகார்த்த தபால்உறை

இலங்கையில் நடைபெறும் உலக இளைஞர் மாநாட்டுக்கென ஞாபகார்த்த முதல் நாள் தபால் உறை வெளியிடப்படவுள்ளதாக இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்கும் உலக இளைஞர் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினருக்கும் இடையே விசேட கூட்டமொன்று நடைபெற்ற போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சும் தகவல் திணைக்களமும் இணைந்து இந்த முதல் நாள் தபால் உறையை வெளியிடுகிறது.

இளைஞர்கள் தொடர்பாக ஒரு மாபெரும் மாநாடு ஆசிய வலய நாட்டில் நடாத்தப்படுவது இதுவே முதல் தடவை என்பதால், இதற்கு சரித்திர முக்கியத்துவம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதாலேயேதபாலுறை வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டலஸ் தெரிவித்துள்ளார்.

# போலிகடனட்டை மோசடி

வெளிநாடுகளில் வாழும் 3 இலங்கைத் தமிழர்கள் தாய்லாந்தில் போலி கடனட்டை மோசடியில் ஈடுபட்டபோது கைதுசெய்யப்பட்டுள்ளனர். வெளிநாடுகளில் வதியும் மூன்று இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட 5 வெளிநாட்டவர்கள் போலி கடனட்டை மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தாய்லாந்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். கரோன் பிரதேசத்தில் ஏ.ரி.எம். நிலையம் ஒன்றில் பணம் எடுக்க முயன்ற போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து ஒரு தொகுதி போலி கடனட்டைகளும் 7 இலட்சம் பாத் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நெதர்லாந்தில் வாழும், விநோதன் தியாகராஜா (29 வயது), நோர்வேயில் வாழும் ஞானபூரணன் ரத்தினசபாபதி (வயது 51), இந்தியாவில் வாழும் நேசரூபன் அருணாசலம் (வயது 28) ஆகியோரே தாய்லாந்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# புலமைப் பரிசில் மாணவர்களுக்கான பொதுஅறிவு

## நிறுவனங்களும் இலட்சினைகளும்

நிறுவனங்கள் பலவித நோக்கங்களைக் கொண்டு இயங்குகின்றன. அவை தமது செயற்பாட்டை வெளிப்படுத்தும் விதமான இலட்சினைகளைக் கொண்டுள்ளன.

### அரச நிறுவனங்கள்

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கை மின்சார சபை

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

சமுர்த்தி அதிகார சபை

மத்திய சுற்றாடல் அதிகார சபை

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை

இலங்கைத் துறைமுக அதிகார சபை

இலங்கை கட்டளைகள் நிறுவனம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

நகர அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கை சுற்றுலாச் சபை

நாடாளுமன்ற செங்கோல்

ஊழியர் நம்பிக்கை நிதிய சபை

### வங்கிகள்

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

NSB

தேசிய சேமிப்பு வங்கி

HATTON NATIONAL BANK LIMITED HNB

ஹற்றன் நஷனல் வங்கி

கொமர்சல் வங்கி

සම්පත් බැංකුව SampathBank

E-mail: mgr.oper@sampath.lk www.sampath.lk

சம்பத் வங்கி

### ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்கள்

ஐக்கிய நாடுகள் சபை

சர்வதேச தொழிலாளர் நிறுவனம்

யுனிசெப்

FAO FIAT PANIS

உணவு விவசாய நிறுவனம்

உலக சுகாதார நிறுவனம்

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு



கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான வினாத்தாளின் தொடர்ச்சி....

35) அதிக இதழ்கள் கொண்ட பூ பின்வருவனவற்றுள் எது?
(1) பூசணி (2) நீல அல்லி (3) அலரி (4) பொப்பி

36) காபோவைதரேற் அதிகம் உள்ள உணவு எது?
(1) இறைச்சி (2) மாம்பழம் (3) நெத்தலி (4) பணிஸ்

37) காந்தத்தினால் கவரமுடியாத பொருள் கீழ்வருவனவற்றுள் எது?
(1) சவர அலகு (2) இரும்பாணி (3) செப்புநாணயம் (4) தையல் ஊசி

38) 

அருகிலே தரப்பட்ட நடத்தை முறை எப்பிராணியின் நடத்தை எனக் கண்டு கீறிடுக.
(1) குரங்கு போல் பாய்ந்து செல்லல்
(2) பூனை போல் செல்லல்
(3) நாய் போல் நடந்து செல்லல்
(4) ஆமை போல் செல்லல்

39) எதிரிகளிடம் இருந்து தப்பித்துக்கொள்ள தனது வாலை சிலிர்த்து எதிரியை பயம் காட்டி விட்டு ஓடும் பிராணி எது?
(1) பூனை (2) அணில் (3) பாம்பு (4) முயல்

40) மாலையில் இலைகள் சுருங்கும் தாவரம் அல்லாதது எது?
(1) அகத்தி (2) துளசி (3) வாகை (4) தொட்டாற் சுருங்கி

41) இலங்கையின் இரு மாவட்டங்களின் பெயர்களை எழுதுக.

(1) ------------------------------ (2) ------------------------------

42) காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகளில் ஆறிலும், மூன்றால் மீதியின்றி வகுபடக்கூடிய இலக்கங்களை எழுதுக.

9 5 7 1 3 12

--------------------------------------------------------------

43) 

உருவில் ஒரு பந்து காணப்படுகின்றது அதன் விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

------------------------------


44) 1099 உடன் 3 ஐக் கூட்டி அத்தொகையை 2ஆல் வகுக்க விடை யாது?

--------------------------------------------------------------

45) 3034 இலிருந்து 40 ஐக் கழித்து அத்தொகையை 3 ஆல் பெருக்குக. விடை யாது?

--------------------------------------------------------------

46) ஒரு பண்ணையில் வளர்க்கப்படும் விலங்குகள் பற்றிய தகவல்கள் வரைபில் காணப்படுகின்றன.




(1) பண்ணையில் வளர்க்கப்படும் விலங்குகளின் மொத்த எண்ணிக்கை 250 எனின் அங்குள்ள முயல்களின் எண்ணிக்கையை கண்டு அவ் எண்ணிக்கையை வரைபில் உரிய நிரலில் குறித்து நிரலை நிழற்றுக.

(2) பண்ணையில் உள்ள ஆடுகளினதும் , கோழிகளினதும் கால்களின் எண்ணிக்கை யாது?


------------------------------------------------------------

47) A என்னும் பாத்திரத்தில் இருந்து $\frac{3}{4}\ell$ நீர் பாவனைக்காக வெளியே எடுக்கப்பட்டது. பாத்திரத்தில் உள்ள மீதி நீரின் அளவு யாது?





------------------------------------------------------------

48) காட்டப்பட்டுள்ள உருவின் சுற்றளவு யாது?




------------------------------------------------------------

49) வழங்கப்பட்டுள்ள சதுரக்கோட்டுப்படம் சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது; அதில் நிறந்தீட்டப்படாத பகுதியை தசமத்தில் தருக,



------------------------------------------------------------

50) ரூ. 13.50 விலையுள்ள ஒரு சவர்க்காரமும் ரூ. 25.00 விலையுள்ள மூன்று பற்பசையும் வாங்கிய சுதா கடைக்காரரிடம் ரூ. 100.00 கொடுத்தால் அவளுக்கு கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு? ------------------------------------------------------------

51) ஒரு பெட்டியிலுள்ள 528 சாக்லட்கள் 6 சிறிய பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள சாக்லட்டுகளின் எண்ணிக்கை யாது? --------------------

52) மோட்டார் ஒன்றின் மானியின் வாசிப்பு பின்வருமாறு காணப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 0 | 9 | 9 | 9 | 9 | km |


மேலும் இவ்வண்டி 1km பயணஞ் செய்தால் மானியில் காட்டும் வாசிப்பை பெட்டியினுள் குறிக்க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | km |

53) ஒரு வாளியில் உள்ள பாலின் கனவளவு 3*l* 305m*l* ஆகும் இத்தகைய 8 வாளிகளில் உள்ள பாலின் கனவளவு யாது?




54) கீழே உள்ள கடிகாரம் இருபது நிமிடம் பிந்திக் காட்டுகிறது. தற்போது கடிகாரத்தில் பி.ப 1.40 எனின் சரியான நேரத்தை டிஜிட்டல் கடிகாரத்தில் குறிக்க




55) வீட்டுத் தோட்டம் ஒன்றில் காணப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை 38 ஆகும். அங்கு காணப்பட்ட பலா மரங்களின் எண்ணிக்கையானது தென்னை மரங்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 9 அதிகமாகும் அங்கு காணப்பட்ட மா மரங்களின் எண்ணிக்கையானது தென்னை மரங்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 8 குறைவாகும் தோட்டத்தில் உள்ள இம்மூன்று மரங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?

------------------------------------------------------------

56) குமார் தனது வீட்டில் இருந்து புறப்பட்டு 20m தூரம் மேற்குநோக்கி கோயிலுக்குச் சென்று அங்கிருந்து30m தூரம் வடக்கு நோக்கி நண்பனின் வீட்டுக்குச்சென்று அங்கிருந்து 10m தூரம் கிழக்குநோக்கி பாடசாலைக்குச சென்றான். பாடசாலையையும் குமார்சென்ற பாதையையும் வழங்கப்பட்டுள்ள சதுரக் கோட்டுப்படத்தில் குறிக்க. உருவில் ஒரு சிறிய சதுரத்தின் ஒவ்வொரு பக்கமும் 10m தூரத்தைக் குறிக்கின்றது எனக் கொள்க.




57)



சுரேஸ் என்ற மாணவன் பாடசாலைக்கு விரைவாகச் சென்று கொண்டிருக்கும் போது பாதையோரத்தில் அமர்ந்திருந்த ஒரு வயோதிபரைக் கண்டான். பாடசாலை ஆரம்பமாக சில நிமிடமே உள்ளது. அவன் அவ்வயோதிபர் அருகில் சென்றான். அதனைத் தொடர்ந்து மேலே தரப்பட்ட மூன்று படச்சட்டத்தையும் அவதானித்து கருத்துள்ள ஆறு வாக்கியம் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்த பட்சம் ஐந்து சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களின் எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியாக இருத்தல் வேண்டும்.

1) ------------------------------------------------------------

2) ------------------------------------------------------------

3) ------------------------------------------------------------

4) ------------------------------------------------------------

5) ------------------------------------------------------------

6)

# வடமாகாணத்தில் 65.33 வீதம் பேர் க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி

## கல்வி அமைச்சின் புள்ளிவிபரத் தகவல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேற்றில் மாகாண ரீதியாக வடமாகாணத்தில் 2013 ஆம் ஆண்டு 65.33 வீதமான மாணவர்கள் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் சாதாரண தர பெறுபேறு தொடர்பான புள்ளிவிபரத் தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களான யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, நெடுந்தீவு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார், மடு, முல்லைத்தீவு, துணுக் காய், கிளிநொச்சி ஆகிய வலயங்களை உள்ளடக்கியதாக சாதாரண பெறுபேற்றில் 2012 ஆம் ஆண்டு 59.99 வீதமான மாணவர்கள் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு ஒப்பிடுகையில் 5.73 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் இவ் அதிகரிப்பு வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

தேசிய மட்டத்தில் வடமாகாண்த்தின் பெறுபேறு 2012 ஆம் ஆண்டு 64.74 விகிதமாகவிருந்த நிலையில் 66.67 வீதமாக உயர்வடைந் துள்ளது.

இதேவேள்ளை, க.பொ.த (சா/த) பரீட்சையில் 9 பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி (A) பெற்ற மாணவர் தொகையில் 2012 ஆம் ஆண்டு 12 வலயங்களிலும் மொத்தமாக 118 மாணவர்கள் சித்தி பெற்ற நிலையில் 2013 ஆம் ஆண்டு 138 மாணவர்கள் அதிதிறமைச் சித்தியைப் பெற்றுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் யாழ். வலயத்திலே அதிகளவான மாணவர்கள் அதிதிறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் 2012 ஆம் ஆண்டு 53 மாணவர்கள் 2013 ஆம் ஆண்டு 61 மாணவர்களும் அதிதிறமைச் சித்தி பெற்றுள்ளதாகவும் இரண்டாமிடத்தில் வடமராட்சி வலயம் உள்ளதாக புள்ளிவிபரத் தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பெறுபேற்றில் 9 பாடங்களும் சித்திபெறாத மாணவர் வீதத்தில் 2012 ஆம் ஆண்டு 4.13 வீதமாக இருந்த நிலையில் 2013 ஆம் ஆண்டு 3.57 வீதமாக குறைவடைந்துள்ளதாகவும் புள்ளிவிபரத் தகவூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பா)


வாழ்க வளமுடன்

பெயர் : த.கபிஷாந்
முகவரி : மருதபுரம், காரைநகர் மேற்கு.
அகவை 1 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



பெயர் : ஜ. அனுஸ்ரீ
முகவரி : கீரிமலை வீதி, மாவிட்டபுரம்.
அகவை 3 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ....................

முகவரி :- ....................

பிறந்த ஆண்டு :- ....................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

....................

பெற்றோர் கையொப்பம்


## தமிழ்த்தின விழாவும் கையேடு வெளியீடும்

யாழ். தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் தமிழ்த் தின விழாவும் எஸ்.எல்.ஜ.ஜி. செயற்றிட்ட கற்றல் கையேடுகள வெளியீடும் இன்று பிற்பகல் 12.45 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையை தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.சிவ சங்கரக் குருக்கள் வழங்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ரி.தர்மலிங்கம், சிறப்பு விருந்தினராக ஸ்ரீசத்தியசாயி சேவா நிறுவன வடமாகாண தலைவர் இ.சரவணபவான் கௌரவ விருந்தினராக பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாளரும் ஓய்வு நிலை அதிபருமான மா.சண்முகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

## கொடியேற்றம்

வட்டுக்கோட்டை அடைக் கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் கொடியேற்றம் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 14 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

## மயானத்தின் மதில் உடைப்பு பொலிஸில் முறைப்பாடு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேசத்திலுள்ள வெருண்டி மயானத்தின் சுற்று மதிலில் 200 அடி வரையான பகுதி இனந்தெரியாதோரால் இடிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரவெட்டி தெற்கு மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட இம் மயானம் இரு சமூகத்தவரால் பயன்படுத்தப்படுகின்ற நிலையில் ஒரு சமூகத்தவரால் மதில் கட்டப்பட்டதுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இனந்தெரியாதோரால் மதில் உடைக்கப்பட்டமை தொடர்பில் பிரதேச சபை தவிசாளரினால் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்மதில் அமைக்கப்பட்டமை தொடர்பில் பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதுடன் மதில் அமைத்தல் விவகாரம் ஒரு கேள்விக்குறியாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.(18)

## யாழ். கோட்டமட்ட சித்திரப் போட்டி முடிவுகள்

யாழ். கோட்டமட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடாத் தப்பட்ட சித்திரப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு :-

தரம் - 1 - பாஷனா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சிலம்பரசன் (கொழும்புத்துறை இ.ம.வித்தி), து.நமிஷ் (சென் ஜோண்ஸ் கல்லூரி), ச.டிலக்சன் (கொழும்புத் துறை துரையப்பா வித்தி), தே.மேரிலியானா (நாவாந்துறை றோ.க.வித்தி).

தரம் -2

வி.மரினோஹரன்சியா (திருக்குடும்ப கன்னியர்மடம்), கி.லிபியா (சென்ஜேம்ஸ் மகளிர் வித்தி), செ.அலறின் (சென் ஜோசப் வித்தி), மு.யதுசன் (கொட்டடி நமசிவாய வித்தி), யு.வரப் பிரகாஸ் (சென் ஜோன்ஸ கல்லூரி).

தரம் -3

சி.சமாயில் (யாழ்.மத்திய கல்லூரி), பீ. நிலு (திருக்குடும்ப கன்னியர் மடம்), ரா.மகிந்தன் (கொழும்புத்துறை துரையப்பா வித்தி), லி.அருள்கதிர்ச் செல்வன் (சென்.பற்றிக் கல்லூரி)

(தொடரும்...)

## சிரமதானச் செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்னப்பள்ளிவாசல் முஸ்லிம் மையவாடியில் இன்று காலை 8 மணிக்குசிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நீண்ட காலத்திற்குப் பின்னர் மையவாடியைப் புனரமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதன் ஓர் அங்கமாக இன்று நடைபெறும் சிரமதானத்திற்கு ஒன்பது பள்ளி வாசல்களின் நிர்வாகிகளும், மஹல்லா வாசிகளும் கலந்து கொள்கின்றனர்.

பல நூற்றூண்டு காலமாக இவ் மையவாடியில் முஸ்லிம் ஜனாஸா (மையம்) நல்லடக்கம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (105)

## வருடாந்த பெருநாள்

பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை திருத்தல வருடாந்த பெருநாள் இன்று முதல் எதிர் வரும் 12 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இவ் நாட்களில் தினமும் மாலை 5.30 இற்கு வழிபாடுகள் இடம் பெறவுள்ளது.

13 ஆம் திகதி பெருநாள் திருப்பலி ஒப்புக்கொடுககப்பட்டு பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை வீதிவலம் இடம்பெறும் இறுதி நாளான 13 ஆம் திகதி நான்கு திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

காலை 5.30 இற்கு முதல் திருப்பலியும், காலை 6.30இற்கு திருநாள் திருப்பலியும், மதியம் 12.00 இற்கு நோயாளருக்கான திருப்பலியும், மாலை 4.00 இற்கு மாலைத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. (48)

## களஞ்சியப் பொறுப்பாளர் பதவிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப் பதவிக்குரிய கல்வித் தகைமையாக சிங்களம், தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் ஏனைய பாடங்களில் இரண்டில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்கள க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

இப்பதவிக்குரிய ஆட் சேர்ப்பு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நடைபெறும். இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையாகும்.

இப்பரீட்சை எதிர்வரும் யூலை மாதம் கொழும்பில் மட்டும் நடாத்தப்படும்

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நீர்ப் பாசன பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம் 230, பௌத்தலோக்க மாவத்தை, கொழும்பு -7 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## நீர் முகாமைத்துவம் விழிப்புணர்வுச் செயற்பாடு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு நிகழ்வு கடந்த புதன் கிழமை கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்ற இச் செயற்றிட்டத்தில் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவத்தில் சுற்றுச்சூழல், விவசாயத்தின் பங்கு என்னும் விடயம் பற்றிய உரை, நிலம் மற்றும் நீர்ப் பாதுகாப்பு என்னும் விடயம் பற்றி இயற்கை வளங்கள் முகாமைத்துவ மையத்தின் இயக்குநர் கலாநிதி டபிள்யூ.விக்கிரமசிங்கவின் உரை என்பன இடம்பெற்றது.

இச்செயற்பாட்டில் கரவெட்டிப் பிரதேச செயலர் நிலத்தடி நீரின் முக்கியத்துவம் அதன் பயன் வடமராட்சிப் பகுதியிலுள்ள விவசாயத்தில் நிலத்தடி நீரின் பாவனை என்பன பற்றி விரிவான விளக்கத்தை வழங்கினார்.

இச்செயற்றிட்டத்தில் பொது அமைப்புக்கள் கலந்து கொண்டனர். (18)

# ஆப்கானில் பாரிய நிலச்சரிவு
# 2100பேர் உயிரிழப்பு




(காபூல்)

ஆப்கானிஸ்தானின் வட கிழக்கு பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 2100ஐ தாண்டி உள்ளதாக அந்நாட்டு கவர்னர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். 4000க்கும் மேற்பட்டோர் மாற்று இடங்க ளில் தங்க வைக்கப்பட்டுள் ளதாக கூறப்படுகிறது.

இந்த பயங்கர நிலச்சரிவால் கண் இமைக்கும் நேரத்தில் 350 பேர மண்ணுக்குள் புதைந்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நிலச்சரிவில் 100இற்கும் மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாகின. 2000 ஆயிரம் பேர் காணாமல் போன தாக தகவல்கள் தெரிவிக்கின் றன. மேலும் ஆயிரக்கணக்கான வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

ஆப்கான் பதக்ஷான் பகுதி யில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வந்த தால் பல இடங்களில் வெள் ளநீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்நிலையில் ஒரு குறிப்பிட்ட மலைப்பகுதி பெயர்ந்து உருண் டது. இதில் மண், கல் என அருகில் இருந்த வீடுகளை மூடிக்கொண்டது. மண்ணில் புதைந்த நபர்கள் மற்றும் உயி ருக்கு போராடிவருவோரை உள் ளூர் அலுவலர்கள் உதவியுடன் ஐ.நா. மனிதவளம் காக்கும் ஒருங் கிணைப்பு குழுவினர் உதவி செய்து வருகின்றனர்.

## 2ஜி ஊழல் விவகாரம் மூவருக்கு அழைப்பாணை

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடு வழக்குடன் தொடர் புடைய கலைஞர் தொலைக் காட்சி பண பரிவர்த்தனை விவ காரத்தில் மத்திய அமலாக்கத் துறை குற்றஞ்சாட்டியுள்ள முன் னாள் அமைச்சர் ஆ.ராசா, தி. மு.க மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, தி.மு.க தலைவர் கரு ணாநிதியின் மனைவி தயாளு அம்மாள் உள்பட 19 பேர் மே 26ஆம் திகதி ஆஜராக வேண் டும் என மனு அனுப்ப டில்லி சிபிஐ நீதிமன்றம்நேற்று முன்தி னம் வெள்ளிக்கிழமை உத்தர விட்டது.

மத்திய அமலாக்கத் துறை கடந்த 30-ஆம் திகதி தாக்கல் செய்திருந்த குற்றப்பத்திரி கையை வெள்ளிக்கிழமை பரிசீ லித்த சிறப்பு நீதிபதி ஓ.பி. சைனி இந்த உத்தரவைப் பிறப் பித்தார்.

உலகச் செய்திகள்

## பறந்த விமானத்தில் பிறந்தது குழந்தை

(லண்டன்)

பிரிட்டிஷ் ஏயர்லைன்ஸ் விமானம் ஒன்று நைஜீரியாவில் இருந்து லண்டனுக்கு புறப்பட்டது. அதில் நைஜீரியாவைச் சேர்ந்த 6 மாத கர்ப்பிணியான உஜுன்வா ஒஷே(வயது 31) பயணம் செய்தார். விமானம் 36 ஆயிரம் அடிக்கு மேல் பறந்து கொண் டிருந்தபோது ஒஷேவாவுக்கு பிரசவ வலி ஏற்பட்டது. உடனடியாக விமானத்தில் வந்தவர்கள் குழந்தையை பத்திரமாக பெற்றெடுக்க உதவினர். ஆறரை மாதத்தில் குழந்தை பிறந்ததால் விமானிக்கு தகவல் கொடுக்கப்பட்டு உடனே தரையிறக்க வலியுறுத்தப்பட்டது.

விமானியும் தாய் மற்றும் குழந்தை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் 36 ஆயிரம் அடிக்கு மேல் பறந்ததையும் பொருட்படுத்தாமல் தரையிறக்க முடிவு செய்தார். அப்போது விமானம் ஸ்பெயின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு தீவான பலேரிக் தீவுகளில் உள்ள பால்மி டி மலோர்ஸ் என்ற விமான நிலையத்தில் தரையிறக்க முடிவு செய்தார். அதன்படி அந்த விமான நிலையத் தின் அதிகாரியை தொடர்பு கொண்டு விமானத்தை இறக்க ஒப்புதல் பெற்று விமானத்தை பத்திரமாக தரையிறக்கினார்.

அங்கு தயாராக இருந்த அம்புலன்ஸில் தாயும் குழந்தையும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பின்னர், விமானம் லண்டனில் உள்ள ஹீத்ரோ விமான நிலையத்திற்கு பறந்து சென்றது.

## முதல்வரின் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கிறார் கருணாநிதி

(சென்னை)

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் பற்றி தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்வைத்து குற்றச்சாட்டுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி பதில் அளித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது,

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் குண்டு வெடித் தது பற்றியும், அதில் பெண் மணி ஒருவர் பரிதாபமாக இறந் தது குறித்தும், பலபேர் காய மடைந்து சிகிச்சை பெற்று வரு வது பற்றியும் நான் மாத்திர மல்ல தமிழகத்திலே உள்ள பல்வேறு கட்சிகளின் தலை வர்களும் அறிக்கை விடுத்திருக் கிறார்கள். ஆனால் அவர்களை யெல்லாம் விட்டு விட்டு என்னை மட்டும் கடுமையாகத் தாக்கி முதல்மைச்சர் ஜெயலலிதா அறிக்கை விடுத்திருக்கிறார்.

கோவை குண்டு வெடிப்பு பற்றி அறிக்கை விட்டிருக்கும் முதலமைச்சர் ஜெயலலிதா, தற்போது தலைநகரிலேயே குண்டு வெடிப்பு நடைபெற்றி ருக்கிறதே, என்ன செய்து கொண்டிருக்கிறார்? கோவை குண்டு வெடிப்பு நடைபெற்றவு டன், முதல்-அமைச்சராக இருந்த நான் கோவை சென்று மருத் துவமனையிலே சிகிச்சை பெறு



பவர்களையெல்லாம் நேரில் கண்டு ஆறுதல் கூறினேனே, அவ்வாறு முதலமைச்சர் ஜெயலலிதா உடனடியாக சென்[illegible] வந்து பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்து ஆறுதல் கூறியிருக்க வேண்டாமா?

நான் ஏதோ சாய்வு நாற்காலி யில் சுகமாக அமர்ந்தவாறே, எதையும் தெரிந்துகொள்ளாமல், மனம் போன போக்கில் கருத் துகளைக் கூறுவதாக தனது அறிக்கையிலே ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு சொல்வது முறை தானா என் பதைத் தமிழ்நாட்டு மக்களின் முடிவுக்கே விட்டு விடுகிறேன். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

## தமிழகத்தை குறிவைத்தே குண்டுத்தாக்குதல் நடந்தது
### விசாரணையில் தகவல்

தமிழகத்துக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையிலேயே சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் தீவிரவாதிகள் திட்டமிட்டு வெடி குண்டு தாக்குதல் நடத்தியுள்ள னர். இதுதொடர்பான முக்கிய ஆதாரங்கள், சி.பி.சி.ஐடி பொலிஸாருக்கு கிடைத்துள் ளன. அதில் வெடிகுண்டு தமிழ கத்துக்கு வைக்கப்பட்ட குறி தான் என்பது முதல்கட்ட விசார ணையில் தெரியவந்துள்ளது.

பெங்களூரில் இருந்து சென்னை சென்ட்ரல் ரயில் நிலை யத்துக்குகடந்த வியாழக்கிழமை காலையில் வந்த குவா ஹாட்டி எக்ஸ்பிரஸ் ரயிலில் இரண்டு குண்டுகள் வெடித்தன. இதில் ஆந்திராவைச் சேர்ந்த சாப்ட் வேர் இன்ஜினீயர் ஸ்வாதி (24) பலியானார். 14 பேர் காயம அடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக தமிழக காவல்துறை, உளவுப் பிரிவு மற்றும் க்யூ பிரிவு பொலிஸார் முதல் கட்ட விசாரணை நடத்தினர். பின்னர் இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி பிரி வுக்கு மாற்றப்பட்டது.

குண்டு வைத்த தீவிரவாதி கள் தமிழகத்துக்கு குறிவைக்க வில்லை என்று சில அதிகாரி கள் தெரிவித்தனர். ஆனால், உண்மையில் இது தமிழகத் துக்கு வைக்கப்பட்ட குறிதான் என்பது சி.பி.சி.ஐ.டி பொலிஸா ரின் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## விமானத்தை தேட ஒருவருடகாலமாகும்
### அவுஸ்ரேலிய அதிகாரி

காணாமல்போன மலேசிய விமானத்தைத் தேடிக் கண்டு பிடிக்க ஓராண்டு காலம் எடுக்கலாம் என்று தேடுதல் பணி களுக்குத் தலைமை தாங்கும் அவுஸ்ரேலிய அதிகாரி கூறி யுள்ளார்.தென் இந்து சமுத்திரத்தில் தமது அணியினர் சரியான இடத்திலேயே தேடுதலில் ஈடுபட்டுள்ளதாக தான் நம்புவதாக மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் வைத்து அங்குஸ் ஹோஸ் டன் கூறியுள்ளார்.

எம்எச் 370 விமானத்தைத் தேடும் பணிகள் புதிய கட்டம் ஒன்றுக்குள் பிரவேசிப்பதாக அவுஸ்ரேலிய பிரதமர் டோனி அபொட் கடந்த திங்களன்று அறிவித்திருந்தார்.கடலின் தரைப் பகுதியில் பெரும் பிரதேசம் ஒன்றை ஸ்கானிங் செய்து பார்ப்பது, இந்தப் புதிய கட்டத்தில் அடங்குகிறது.எட்டு வாரங் களுக்கு முன்னர் காணாமல்போன இந்த விமானத்தின் பாகங்கள் எதுவும் இதுவரை சிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ரயில்கள் மோதியதில் 170 பேர் காயம்
### தென்கொரியாவில் சம்பவம்

(சீயோல்)

தென்கொரிய தலைநகர் சியோலில், சுரங்க ரயில் பாதை யில் நின்றுகொண்டிருந்த ரயில் மீது மற்றொரு ரயில் மோதி யதில், பயங்கர விபத்து ஏற்பட் டது. இதில் 170-இற்கும் மேற்பட் டோர் காயம் அடைந்தனர். அதிரஷ்டவசமாக உயிர் சேதம் ஏற்படவில்லை. உள்ளூர் நேரப் படி நேற்றுமுன்தினம் காலை 3.30 மணி அளவில் சியோலின் கிழக்குப் பகுதியில் உள்ள சங் வாங்சிம்னி ரயில் நிலையத்தில், இயந்திர கோளாறு காரணமாக ஒரு ரயில் நின்றுகொண்டி ருந்தது. அப்போது, பின்னால் இருந்து வந்த மற்றொரு பய ணிகள் ரயில் அதிவேகத்தில் பயங்கரமாக மோதியது.



இதனால் தடம் புரண்ட ரயி லிருந்து பொதுமக்கள் கீழே குதித்து தண்டவாளம் வழியாக தப்பினர். மேலும், விபத்தில் சிக்கிய நூற்றுக்கணக்கானோரை தீயணைப்புதுறையினர் மீட்ட னர். அவர்களுக்கு உதவியாக 10 அம்புலன்ஸ்கள் உதவிய தால் உயிர் சேதம் தவிர்க்கப் பட்டதாக சியோல் சுகாதாரத் துறை அதிகாரி தெரிவித்தார்.

இந்த விபத்தில் காயமடைந் தவர்கள் ஹங்யாங் பல் கலைக்கழக மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து குறித்து விசா ரணை மேற்கொள்ள தென் கொரிய அரசு உத்தரவிட்டுள் ளது.

# வீதிப் பெயர்ப்பலகையில் விளம்பரங்கள் நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## மக்கள் கேள்வி




வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள வீதிப் பெயர்ப்பலகைகளில் விளம்பரங்கள் ஒட்டப்படுவதால் பொது மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

நகர்ப்பகுதியில் உள்ள வீதியின் பெயர்களை மக்கள் அறிந்து கொள்ளும் நோக்கோடு நகர சபை அனுமதி பெற்று தனியார் நிறுவனங்கள் பல பெயர்ப்பலகையை அமைத்திருந்தன.

இப் பெயர்ப் பலகையில் அண்மைக்காலமாக தனியார் கல்வி நிறுவனங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களும் தமது விளம்பரங்களை ஒட்டி வருவதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை நகரசபையின் அனுமதி பெற்று வீதி பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்ட போதிலும் அதில் விளம்பரங்களை ஒட்டுவோர் மீது நகர சபை நடவடிக்கை எடுக்காத காரணத்தாலேயே தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக் சமூக ஆர்வலர்கள் மேலும் தெரிவித்தனர்.

# புத்தாண்டுக் கலைவிழா நடாத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம் கொட்டடிசனசமூக நிலையத்தினரும் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புத்தாண்டு கால விழா வொன்றினை மிகச் சிறப்பாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

பேராசிரியர் நா. தனேந்திரன் (ஜே.பி.) தலைமையில் இடம் பெறவுள்ள இந்தப் புத்தாண்டுக் கலை விழாவில் பிரதம விருந்தினராக பேராசிரியர் எஸ். தேவராசா கலந்து கொள்கின்றார்.

மற்றும் இவ்விழாவில் நிலையத்தை சூழ அமைந்துள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பொது அறிவுப்போட்டி கல்விப் பொதுத்தராதர சாதாரனம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்கள் வைத்தியர்கள், கல்வியாளர்கள்,சமூக சேவையாளர்கள் யாழ்.நகரில் வாழ்ந்து பல பெரியோர்களினது மதிப்புக்களைப் பெற்றுக்கொண்ட சான்றோர்கள் எனப் பலதரப்பட்டவர்களை அழைத்து பட்டங்கள், பரிசுகள் நன்கொடைகள் கௌரவிப்பு என்பவற்றினை வழங்கி உதவுவதற்கான ஏற்பாடுகளையும் நிலையத்தின் நிர்வாகிகள் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# உலகில் எந்தவொரு ஊடகமும் சுயாதீனமாக இயங்குவதில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு



உலகின் எந்தவொரு ஊடகமும் சுயாதீனமாக இயங்கவில்லை என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. உலக ஊடக சுதந்திரதினத்தை முன்னிட்டு அரசாங்கம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது. பூரணமாக ஊடக சுதந்திரம் சமூகத்திற்கு பாதக விளைவுகளையே ஏற்படுத்தும் என அரசாங்கத் தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆரியரட்ன அத்துகல தெரிவித்துள்ளார். அநேகமாக ஊடகங்கள் துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் சில கருத்துக்களை மக்கள் மீது திணிப்பதனால் மக்களினால் சரியானதை தீர்மானிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஒப்பீட்டளவில் உலகின் ஏனைய நாடுகளை விடவும் இலங்கையில் ஊடக சுதந்திரம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான ஊடகங்கள் செயற்பட்டு வருவதாகவும், இதன் மூலம் ஊடகத் தணிக்கை கிடையாது என்பது புலனாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அரங்கில் இலங்கையை தனிமைப்படுத்தும் நோக்கில் சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இலங்கையின் ஊடக சுதந்திர நிலைமை குறித்து பிழையான தகவல்களை வெளியிட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஊடக சுதந்திரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிப்பதற்கு போதியளவு ஆதாரங்கள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# விசமிகள் வைத்த தீயினால் வேலிகள் எரிந்து நாசம்

(வடமராட்சி)

வரணி வடக்கு சைவக்குடியிருப்பு பிரதேசத்தில் பற்றைகள் வளர்ந்துள்ள நிலையில் சில விஷமிகளால் இப்பற்றைகளுக்கு வைக்கப்பட்ட தீயினால் வீட்டு வேலிகள் எரிந்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

குறித்த பிரதேசத்தில் வைக்கப்பட்ட தீ பற்றி எரிந்து 100 இற்கு மேற்பட்ட இளம் பனைகள் வடலிகள் என்பனவும் எரிந்து நாசமாகியுள்ளதாக தேசமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இத் தீ இரண்டு குடும்பங்களின் வீட்டு வேலிகளுக்கும் பரவியுள்ளதாகவும் பூமரங்களும் 'இதில் எரிந்து கருகியுள்ளதாக சட்டவிரோதமாக விறகு தறிப்பவர்களே இத்தகைய செயலை செய திருக்கலாம் எனவும் இப்பகுதி மக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (109)

# விபத்தில் படுகாயம்

நுணாவில் பகுதி ஏ-9 வீதியில் சென்றடிப்பரும் ஓட்டோவும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் ஓட்டோ சாரதி படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டார். நேற்றுமாலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் எழுது மட்டுவாள், ஒட்டுவெளியைச் சேர்ந்த கனகலிங்கம் துஷ்யந்தன் (வயது 31) என்பவரே விபத்தில் படுகாயமடைந்தவராவார்.

# இலங்கை இளைஞன் புதுடில்லியில் கைது

(புதுடில்லி)

இலங்கையைச்சேர்ந்த இளைஞரொருவர் புதுடில்லி விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். ஜேசுதாஸ் தோம்சன் (வயது-25) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

இது குறித்துஇளைஞன் கடந்த சில நாட்களுக்கு முன்பு வெளிநாட்டிற்கு செல்ல திட்டமிட்டு டில்லி விமான நிலையம் சென்றார். அங்கு குடியுரிமை அதிகாரிகள் அவரது கடவுச்சீட்டை பரிசோதித்தனர். அப்போது சந்தேகம் அடைந்த அவர்கள் அவரை சி.பி.ஐ. வசம் ஒப்படைத்தனர்.

சி.பி.ஐ. அதிகாரிகளின் விசாரணையில் திருவாரூரை சேர்ந்த வாசு என்பவரது பெயரில் போலி கடவுச்சீட்டு எடுக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து தோம்சனை கைது செய்த பொலிசார் அவரை தமிழகம் கொண்டு வந்ததுடன் சி.பி.ஐ. நீதிபதி கிருஷ்ணன் வீட்டில் அவரை ஆஜர்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து தோம்சனை எதிர்வரும் 12ஆம் திகதி வரை காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டனர். அவர் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

### தாதியர்கள்..

வைத்தியசாலையின் தாதி உத்தியோகத்தர்கள் அவசர பிரிவு கடமைகளில் இருந்தும் நேற்று விலகியுள்ளனர். தாதிய உத்தியோகத்தர்களின் பணிப் பகிஷ்கரிப்பை அடுத்து சில வைத்தியசாலைகளில் வைத்தியர்களே தாதியர்களின் பணியையும் மேற்கொண்டுள்ளனர்.

### மத...

வதாகவும் பாப்பரசர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடிப்படைவாதிகளின் பல்வேறு செயற்பாடுகள், வன்முறைகள், அச்சுறுத்தல்களால், பதற்றநிலை ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பதற்றநிலை மதங்களுக்கிடையிலான மற்றும் மத உறவுகளுக்கிடையில் அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடும் என்றாலும், இலங்கை தேவாலயங்கள் அமைதிக்கான பங்காளிகளுடனும் கலந்துரையாடலுக்கான தூதுவர்களுடனும் இணை பிரியாமல் இருக்க வேண்டும்.

அச்சுறுத்தும் செயற்பாடுகள் கத்தோலிக்க சமூகத்தையும் பாதிக்கும். மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்திக்கொள்வது அவசியமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

### இலங்கை....

பிடிப்பதுடன் ஒவ்வொருவிடயத்திலும், அமெரிக்காவுடன் நெருங்கிச் செயற்படுவதற்கான ஊக்குவிப்பாகவும் அமைந்துள்ளது.

இருநாடுகளும், கடந்த பல தசாப்தகால உறவில் மிகவும் நெருக்கமான செயற்பாட்டைக்கொண்டுள்ளதுடன், இதன்மூலம் இருநாடுகளும் பல்வேறு நன்மைகளையும் பெற்றுள்ளன.

அத்துடன் பயங்கரவாதிகளுக்கு கிடைக்கப்பெறும் நிதி உதவிகளை கட்டுப்படுத்தியதற்காக அமெரிக்காவிற்கு நன்றி தெரிவிப்பதுடன் பயங்கரவாதம், மனித உரிமை, ஜனநாயகம், போன்றன தொடர்பில் இரண்டுநாடுகளுக்குமிடையில் பொதுவான நிலைப்பாடே காணப்படுவதாகவும். அவர் தெரிவித்துள்ளார்.

### கடனட்டை..

பாத் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நெதர்லாந்தில் வாழும், விநோதன் தியாகராஜா (29 வயது), நோர்வேயில் வாழும் ஞானபூரணன் ரத்தினசபாபதி (வயது 51), இந்தியாவில் வாழும நேசரூபன் அருணாசலம் (வயது 28) ஆகியோரே தாய்லாந்துப் பொலிசாரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

### மூன்றாம்...

தீர்வுத் திட்டமொன்றை முன் வைக்க முடியும். 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை பெற்றுக்கொடுக்க முடியும் என கருதவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஜனாதிபதி மெய்யாக அரசியல் சாசனத்தில் மாற்றத்தைத் கொண்டு வர விரும்பினால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினை விடவும், அரசியல் சாசன பேரவை ஒன்றையே அமைத்திருக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

### இலங்கையில்...

பதில் உதவி நிர்வாகியான டெனிஸ் ரோலின்ஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளிவிவகாரக் குழுவின். ஆசிய-பசுபிக் உப குழுவின் முன்பாக, 2015ஆம் ஆண்டுக்கான அதிபர் ஒபாமாவின் வரவு செலவுத் திட்டத்தில் தெற்காசியாவக்கான தேவைகள் குறித்து அளித்த விளக்கத்திலேயே அவர் இவ்வாறு விபரித்துள்ளார்.

இலங்கையில் எதேச்சாதிகாரத்தை வலுப்படுத்தும் போக்கு பலமாக உள்ளது.

இலங்கை தேசிய அளவில் எதேச்சாதிகாரத்தை வலுப்படுத்தும் பலமான போக்கு இருந்தாலும், இலங்கை தொடர்ந்தும் உள்ளூர் தேர்தல்களை நடத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

### இலவச...

நிதியில் இருந்து நிதியினை பெற்றுக்கொடுத்ததை அடுத்து மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கான இலவச குடிதண்ணீர் வழங்கப்பட்டுவருகின்றது.

வேலணை, நயினாதீவு ஆகிய பகுதிகளுக்கான குடிதண்ணீரை வேலணைப் பிரதேசசபையும் பங்குடுதீவுப்பகுதிக்கான விநியோத்தை புங்குடுதீவு சர்வோதயம், புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஆகியனவும் சரவணைப்பகுதிக்கான விநியோகத்தினை சரவணை கிராம அபிவிருத்தி சங்கமும் பொறுப்பேற்று குடிநீர்வழங்கங்கலை மேற்கொண்டுவருகின்றன. (05)

### இலங்கை-இந்திய...

எப்போது சந்தித்துப் பேசும் என்பது குறித்து இன்னமும் முடிவுசெய்யப்படவில்லை.

எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள கூட்டத்துக்குச் சென்னையில் இருந்து 28 பேர் கொண்ட குழுவினர் 11 ஆம் திகதி இலங்கை வரவுள்ள்னர். அத்துடன் இலங்கை சார்பாகவும் 28 பேர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்திய மத்திய அரசாங்கம் முன்வைத்த கோரிக்கையை தொடர்ந்து இந்தக் கூட்டத்தை நடத்த நாம் ஒப்புக் கொண்டுள்ளோம்.

இந்தப் பேச்சு முன்னர் இருதடவைகள் தமிழ்நாட்டு அரசு முன் வைத்த நிபந்தனைகளைத் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

# சட்டவரைபுகள் குறித்து கமலேஷ் சர்மா, சமல் பேச்சு



(லண்டன்)
சபாநாயகர் சமல் ராஜபக்ஷ விற்கும், பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மாவிற்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. சட்ட வரைபுகள் தொடர பில் பொதுநலவாய நாடுகள் செயலகத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. சமல் ராஜபக்ஷ தற்போது லண்டனுக்கு விஜயம் செய்துள்ளார்.

லண்டனின் மால்பேரொ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. நீதிமன்றின் சுயாதீனத்தன்மை, நீதவான் நியமனங்கள் தொடர்பிலான சட்டத் திருத்தங்களை மேற்கொள்வது குறித்து ஏற்கனவே இலங்கைக்கு பொதுநலவாய நாடுகள் அமைப்பு ஆலோசனைகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றின் சுயாதீனத்தன்மை, சட்டம் ஒழுங்கு மற்றும் நீதிமன்றின் சுயாதீனத்தன்மை ஆகியவற்றை நிலைநாட்டக் கூடிய. வகையிலான சட்டத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமானது என பொதுநலவாய நாடுகள் அமைப்பு வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 7 ஆவது ஐ.பி.எல்.



மும்பைக்கு முதல் வெற்றி
பஞ்சாப் 168/5 (20 ஓவர்)
சகா 59
மக்ஸ்வெல் 45
ஹர்பஜன் சிங் 2,
அன்டர்சன், மலிங்க
தலா ஒரு விக்கெட்

மும்பை 170/5 (19.1 ஓவர்)
ரோகித் சர்மா 39, கௌதம் 33
அன்டர்சன் 35, பொலார்ட் 28
சந்தீப் சர்மா, தவான் தலா 2 விக்கெட்
5 விக்கெட்டுக்களால் மும்பை வெற்றி
ஆட்டநாயகன்: அன்டர்சன்



டெல்லி 152/5 (20 ஓவர்)
டி கொக் 42
டுமினி 39
தம்பே, போல்க்னர்
தலா 2 விக்கெட்

ராஜஸ்தான் 156/3 (18.3 ஓவர்)
நாயர் 73, சாம்சன் 34
சமி, பார்னல், நதீம் தலா 1 விக்கெட்
ஆட்டநாயகன்: நாயர்
7 விக்கெட்டுக்களால் ராஜஸ்தான் வெற்றி

## சாகிர் ஹுசைனுடன் தொடர்பு மற்றொரு இலங்கையர் கைது

தமிழகத்தில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவாளியான இலங்கைப் பிரஜை சாகிர் ஹுசைனுடன் தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மற்றுமொரு இலங்கையர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டியைச் சேர்ந்தவரான சாஹிர் ஹுசைனிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து சென்னை மேற்கு மாம்பலத்தில் சிவபாலன் (வயது - 39) என்ற இலங்கையரும், தியாகராய நகரில் 37 வயதான மொஹமட் சலீம் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் சென்னையில் பல இடங்களில் போலி நாணயத்தாள்களைப் புழக்கத்தில விட்டமை தெரியவந்துள்ளதாக இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து சந்தேகநபர்கள் புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## அம்பாந்தோட்டையில் ஐ.தே.க. ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் அம்பாந்தோட்டை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றைய தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்தல சர்வதேச விமான நிலையத்தைப் பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தாக்கியும் ஆயுதங்களைக் காட்டியும் அச்சுறுத்தியவர்கள் தொடர்பாக, பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாச, ஹர்ஷ டி. சில்வா, கபீர் ஹாசீம், பீ. ஹெரிசன், ருவான் விஜேவர்தன, அகில விராஜ் காரியவசம், ரவி கருணாநாயக்க, கயந்த கருணாதிலக்க, மங்கள சமரவீர, அஜித் பீ.பெரேரா, அஜித் மன்னப்பெரும, எரான் விக்ரமரத்ன, நலின் ஜயமக மற்றும் ஆர்.யோகராஜன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

எனினும், ஐ.தே.க வினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் அம்பாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் நிறைவுக்கு வந்தது.

## மண்ணை மாசுபடுத்தும் வகையில் மேலதிக இரசாயனப் பாவனை

### அமைச்சர் நிமால் கவலை

(கொழும்பு)
தேவைக்கு மேலதிகமாக இரசாயனப் பசளைகளை போட்டு புளி வாழைப்பழத்தை ஆனை வாழைப்பழம் போன்று பெரிதாக விளைவிப்பதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

விவசாயத் தொழிலில் மண்ணை மாசுபடுத்தும் போது அதன் பிரதிபலன்களை விவசாயிகளே எதிர்நோக்க நேரிடும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் மகாவலி காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கே உரித்தான பப்பாளிப் பழங்களுக்கு பதிலாக ரெட்லேடியை பயிரிட்டு அமெரிக்க நிறுவனங்களை செல்வந்தர்களாக்கினர்.

சேனையில் விளையும் மஞ்சள் பூசணிக்காயை இன்று காணக் கிடைப்பதில்லை.

எவ்வித போஷாக்கு குணங்களும் இல்லாத மீண்டும் பயிரிட முடியாத ஹைரைட் பூசணிக்காயையே எமக்கு உண்ண நேர்ந்துள்ளது.

பயற்றங்காய், பீர்க்கங்காய் போன்ற காய்கறிகளும் அழிந்து விட்டன. புளி வாழைப் பழத்தை ஆனை வாழைப் பழம் போல் மாற்ற தேவைக்கு அதிகமாக பசளையிடுகின்றனர்.

பணத்திற்காக எமது விவசாயிகள் அழிவை ஏற்படுத்தும் விவசாயப் பயிர்ச் செய்கையை நாடினர்.

மண்ணை மாசுபடுத்தும் விவசாயிகள் அதன் பிரதி பலனை அனுபவிப்பார்கள். அவர்களின் அப்பாவிப் பிள்ளைகள் இதன் பாதிப்புகளை அனுபவிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

## ஊவா மாகாண தேர்தலில் ஹரீன் எம்.பி. களமிறக்கம்

### வியூகம் வகுக்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)
எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில், முதலமைச்சர் வேட்பாளராக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாந்துவை நியமிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து கேட்டு விலகி, தேர்தலில் போட்டியிட அவர் தனது விருப்பைத் தெரிவித்துள்ளதாக அக்கட்சி வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து முதலமைச்சருக்காக போட்டியிடுகின்ற ஷசீந்ர ராஜபக்ஷவுக்கு நல்லதொரு பதிலடி கொடுக்க வல்லவர் ஹரீன் பிரனாந்துவே என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் மேலிட நம்பிக்கையாகும் எனவும் கூறப்படுகின்றது.

## சிறுநீரக நோய் ஆய்வாளருக்கு கொலை அச்சுறுத்தல் விடுப்பு

(கொழும்பு)
இலங்கை முழுவதும் பரவிச் செல்கின்ற மிகப் பயங்கரம் வாய்ந்த சிறுநீரக நோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணமான ஆசாணிக் உள்ளிட்ட சிறுநீரகத்தின் வழி கொண்டு செல்கின்ற முக்கிய தீங்குவிளைவிக்கும் நாசினியாக கல்பிபோஸ்ட் எனும் களைகொல்லியை கண்டுபிடித்துள்ளனர்.

இதனால், அமெரிக்க கலிபோர்னியா பல்கலைக்கழக பேராசிரியர் சரத் குணதிலக்கவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள்தாகத் தெரியவருகின்றது.

அந்த ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களான ரஜரட்ட மருத்துவ பீட விரிவுரையாளர் வைத்தியர் சன்ன ஜயசுரமன இது பற்றித் தெரிவிக்கும்போது, அந்த ஆய்வை உடனடியாக நிறுத்துமாறும், இலங்கைப் பிரச்சினை பற்றி பேச வேண்டாம் எனவும் இவ்அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த அச்சுறுத்தலை விடுத்துள்ளவர்கள் இலங்கையைச் சேர்ந்த ஒரு பகுதியினர் எனத் தெரியவந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உறவினர்கள் ஏற்கமறுத்த 40 சடலங்கள் அடக்கம்

(வவுனியா)
வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் பல மாதங்களாக உரிமை கோரப்படாமலும், உறவினர்களால் எடுத்துச் செல்லப்படாமலுமிருந்த 40 பேரின் உடல்கள் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

33 பேரின் உடல்கள் வயது முதிர்ந்த நிலையில் ஏற்பட்ட நோயால் இறந்தவர்களுடையதெனவும், இவற்றில் 110 வயதுடைய பெண்ணொருவருடைய உடலும் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் சடலங்களை எடுத்துச் செல்வதற்கு உறவினர்கள் மறுப்புத் தெரிவித்தவையும் வேறுசில உறவினர்கள் அந்த சடலங்களை அடையாளப்படுத்த முடியாமல் இருந்ததாலும் இந்தச் சடலங்கள் பல மாதங்களாக பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கடந்த 29 ஆம் திகதி வவுனியா இராஜேந்திரகுளம் இந்து மயானத்தில் இந்தச் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## பொலிஸ் சார்ஜன்ட் கஞ்சாவுடன் கைது

ஒரு கிலோ கிராம் கஞ்சாவுடன் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் நவகத்தேகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் கே.கே.ரஞ்சித் எனும் வவுனியா பொலிஸ் பிரிவில் பணிபுரியும், மொனராகலை பகுதியைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஆவார். சந்தேகநபர் பயணித்ததாகக் கூறப்படும் முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளதோடு அதன் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கர வண்டியின் சாரதி கல்கமுவ பகுதியைச் சேர்ந்தவராவார். சந்தேகநபர் வசமிருந்து 10,000 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர் இரண்டு கஞ்சா பொட்டலங்களை கொண்டு வந்து ஒன்றை விற்றுவிட்டு, மற்றொன்றை விற்கச் சென்ற வேளையே கைதாகியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் குறித்த கஞ்சா பொட்டலங்கள் மொனராகலையில் இருந்து கொண்டுவரப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.